Registered as a News Paper | பக்கங்கள் 06 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 20 | [04-07-98] | ஞாயிற்றுக்கிழமை | ஒசை 136

## உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் சக்கரின் கலந்த ஐஸ்பழம் விற்பனை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும் தன்மையுள்ள சக்கரின் கலந்த ஐஸ்பழம் விற்பனையாவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஐஸ்பழ உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ரி. மகாதேவன் பாவனைக்குதவாத அவ் ஐஸ்பழத்தை அவ்விடத்திலேயே அழித்தார். சீனியை விட மிக இனிமையான சக்கரின் சீனிக்குப்பதிலாக உபயோகிக்கப்படுகிறது. இதனைச் சிறுவர்கள் உட்கொள்வதன் மூலம் அவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படலாம் என்று பிராந்திய சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புலிகள் மீதான அநாவசிய சந்தேகம்; கைதிகள் விடுதலையைக் கெடுத்தது!

### வீரவணக்கம்



2ம்- லெப். கேடயன்

வன்னி மாவட்டத்தில் கிளிநொச்சியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற விபத்தொன்றில் 2ம்- லெப்டினன்ட் கேடயன் (பாலசுப்பிரமணியம் சர்மா கரிகரன், கொழும்பு) எனும் விடுதலைப் புலிகள் போராளி மரணமடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்காது

## ஏற்புத்தடுப்பூசி ஏற்றிய வைத்தியர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் புங்கையிரத நிலைய வீதியில் ஏற்பூசி ஏற்றப்படும் என்று விளம்பரம் செய்து ஏற்புத் தடுப்பூசி ஏற்றிய சித்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரியால் எச்சரிக்கப்பட்டார். ஏற்புத் தடுப்பூசி, ஏற்றுவதைக் கைவிடுமாறும் பணிக்கப்பட்டது.

குளிரூட்டி இல்லாத தனியார் வைத்திய சாலைகளில் ஏற்புத் தடுப்பூசி ஏற்றுவதையும், மருந்துக் கடைகளில் ஏற்புத் தடுப்பூசி விற்பதையும் தவிர்க்குமாறு பிராந்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம், பத்திரிகைகள் மீது சர்வமதகுழு இணைப்பாளர் கண்டனம்

[கொழும்பு]

அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது கொண்ட அநாவசிய சந்தேகமும், சில பத்திரிகைகளும், அரச உயர் அதிகாரிகளும் மேற்கொண்ட அவதூறான பிரசாரமுமே புலிகளின் காவலிலுள்ள ஏனைய பொலிஸாரும், இராணுவச் சிப்பாயும் விடுதலை செய்ய முடியாமல் போனதிற்குக் காரணம் என சர்வமத குழுவின் இணைப்பாளரும், இசிபதன ராமய வின் பிரதமகுருவான விகாராதிபதி மாதம்ப அஜித் தேரோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில், அரசாங்கத்தையும் பத்திரிகைகளையும் கண்டனம் செய்தார், வடக்கேவிடுதலைப்புலிகளிடம் சிறைக்கைதிகளாக இருந்த நோய்வாய்ப் பட்டவர் களையும், விடுதலைப் புலிகள் விடுதலை செய்த ஐவரையும் தவிர ஏனைய பொலிசாரும் சிப்பாயும் விடுதலை செய்ய முடியாமல் போனதற்கு அரசாங்கத்திற்கும், பத்திரிகைகளுக்கும் கணிசமான பங்குண்டு என்றார்.

கைதிகள் விடுதலை தொடர்பான பேச்சுக்கள் முறிவடைவதற்கு அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது கொண்ட அநாவசிய சந்தேகமும் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரமும் காரணமாகும் என்றார். இவ்வாறான பிரசாரத்தை பத்திரிகை மூலம் வெளியிட்டு அப்பாவி சிங்கள மக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏவி விடுதல் மூலம் குறுகிய லாபம் தேட அரசாங்கம் முனைந்தது எனக் குற்றம் சாட்டினார்.

தடை செய்யப்பட்டு விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தடைநீக்கப்பட்ட பொருள்களை மீண்டும் வடபகுதிக்கு அனுப்பும் விடயத்தை தவறாக பிரசாரம் செய்யப்பட்டது என்றார்.

இத் தேரோவின் தலைமையிலான பௌத்த மதக்குழுவொன்று கடந்த வருடம் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தமை தெரிந்ததே.

## சமாதான தீர்வில் அரசுக்கு நாட்டமில்லை

### 'விடுதலைப் புலிகள்' தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை நேர்மையான முறையிலும் சமாதான வழியிலும் தீர்த்து வைக்கும் எண்ணம் சிறிலங்காவின் புதிய அரசுக்கு இல்லை என்பதையே யுத்தக்கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்துகொண்ட முறையில் இருந்து தெளிவாகியுள்ளது'' இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப்

அரசின் தீவிர தமிழின விரோதப் போக்கையே எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் நகர்வுகளையல்ல இராணுவ படையெடுப்புக்களை மேற்கொள்ளவே சிறிலங்காவின் புதிய அரசு முடிவெடுத்துள்ளது.

அதேவேளை தமிழரின் தாயகமான வடக்கு-கிழக்கின் அரசியல் விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையும், நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் சிறிலங்காவின் படைத்துறைத் தலைமையின்கைகளைச் சென்றடைந்து விட்டதையும் இவ் விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நிலைமைக்கு தமிழர் சுதந்திரத்தை மறுத்தமையே காரணம்

## 4000ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக் குறையை தீர்ப்பதற்கு வசதியான 4000 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு திறைசேரி அனுமதி வளங்கியுள்ளது.

இதற்கமைய சகல கல்வி

## 550 தமிழ் அகதிகள்

# சமாதான தீர்வில் அரசுக்கு நாட்டமில்லை

## 'விடுதலைப் புலிகள்' தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை நேர்மையான முறையிலும் சமாதான வழியிலும் தீர்த்து வைக்கும் எண்ணம் சிறிலங்காவின் புதிய அரசுக்கு இல்லை என்பதையே யுத்தக்கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்துகொண்ட முறையில் இருந்து தெளிவாகியுள்ளது" இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; விடுதலைப் புலிகள் வசமுள்ள சிங்களப் போர்க் கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக தமிழ் மக்கள் மீதான பொருளாதாரப் பளுவை நீக்கவேண்டும் என்று இணக்கம் காணப்பட்ட ஓர் உடன்பாட்டை திடீரென இடை நிறுத்திய செயல் புதிய அரசின் தீவிர தமிழின விரோதப் போக்கையே எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் நகர்வுகளையல்ல இராணுவ படையெடுப்புக்களை மேற்கொள்ளவே சிறிலங்காவின் புதிய அரசு முடிவெடுத்துள்ளது.

அதேவேளை தமிழரின் தாயகமான வடக்கு-கிழக்கின் அரசியல் விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையும், நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் சிறிலங்காவின் படைத்துறைத் தலைமையின் கைகளைச் சென்றடைந்து விட்டதையும் இவ் விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 550 தமிழ் அகதிகள் ஆகஸ்ட் 15இல் திரும்புவர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்று தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் படிப்படியாக நாடு திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளை மேற்கோள்காட்டி டெயிலிநியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முதற்கட்டமாகநாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள சுமார் 7000 தமிழ் அகதிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதிமுதல் இரு கப்பல்கள் மூலம் அழைத்துவரப்படவுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வின் பிரதமகுருவான விகாராதிபதி மாதம்பே அஜித் தேரோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில், அரசாங்கத்தையும் பத்திரிகைகளையும் கண்டனம் செய்தார், வடக்கேவிடுதலைப்புலிகளிடம் சிறைக்கைதிகளாக இருந்த நோய்வாய்ப் பட்டவர்களையும், விடுதலைப் புலிகள் விடுதலை செய்த ஐவரையும் தவிர ஏனைய பொலிசாரும் சிப்பாயும் விடுதலை செய்ய முடியாமல் போனதற்கு அரசாங்கத்திற்கும், பத்திரிகைகளுக்கும் கணிசமான பங்குண்டு என்றார்.

கைதிகள் விடுதலை தொடர்பான பேச்சுக்கள் முறிவடைவதற்கு அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது கொண்ட அநாவசிய சந்தேகமும் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரமும் காரணமாகும் என்றார். இவ்வாறான பிரசாரத்தை பத்திரிகை மூலம் வெளியிட்டு அப்பாவி சிங்கள மக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏவி விடுதல் மூலம் குறுகிய லாபம் தேட அரசாங்கம் முனைந்தது எனக் குற்றம் சாட்டினார்.

தடை செய்யப்பட்டு விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கதடைநீக்கப்பட்டபொருள்களை மீண்டும் வடபகுதிக்கு அனுப்பும் விடயத்தை தவறாக பிரசாரம் செய்யப்பட்டது என்றார்.

இத் தேரோவின் தலைமையிலான பௌத்த மதக்குழுவொன்று கடந்த வருடம் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தமை தெரிந்ததே.

### இன்றைய நிலைமைக்கு

# தமிழர் சுதந்திரத்தை மறுத்தமையே காரணம்

(கொழும்பு)

"தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் மறுத்து பல்லாண்டு காலமாக அவர்களை ஏமாற்றி வந்தமையே தற்போதைய நிலைக்கு காரணம். சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நட்புறவை சில இனவாத அரசியல் வாதிகள் குழப்ப முயற்சிப்பதை தடுத்து நிறுத்துவதே தற்போதைய முக்கியசெயல்"

இவ்வாறு விடுதலைப்புலிகளால் யுத்தக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கைதிகளில் ஒருவர் பி.பி.சிக்கு தெரிவித்தார். நாரன்பிட்டிய பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் இருவர் பி.பி.சி "சந்தேசிய" கொழும்பு நிருபருக்கு பேட்டியளித்தனர்.

இறுதியாக சுகவீனம்காரணமாக விடுவிக்கப்பட்டவர் கருத்து தெரிவிக்கையில்; "நான் நான்கு தினங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். அப்பொழுது பல தமிழ் மக்கள் என்னை வந்து பார்வையிட்டனர். உறவினரை சுகம் விசாரிப்பது போல் அக்கறையுடன் விசாரித்தனர். அன்புடன்உரையாடினர்" என்றார்.

மற்றொருவர் கருத்து தெரிவிக்கையில் "பொருளாதார தடையினாலும் யுத்தத்தினாலும் தமிழ் மக்கள் பெரும் துன்பம் அனுபவிக்கின்றனர். அவர்கள் தேவையான அத்தியாவசிய பொருள்கள் கிடைக்காத நிலையில் மூன்று வருடகாலமாக கஷ்டங்களை எதிர்கொண்டிருப்பதை நாம் அறிவோம். இந்த பொருளாதாரத் தடை அர்த்தமற்றஒன்று. அங்குள்ள மக்களுக்கு தேவையான பொருள்கள் வழங்கப்படவேண்டும். யுத்தத்தினால் சிங்கள மக்களைவிட தமிழ் மக்களே பெரும் துன்பம் அனுபவித்து வருகின்றனர் என்பதை மறக்கக்கூடாது என்றார்.

### 4000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக் குறையை தீர்ப்பதற்கு வசதியான 4000 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு திறைசேரி அனுமதி வளங்கியுள்ளது.

இதற்கமைய சகல கல்வி மாவட்ட பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர் தேவைபற்றிய விபரத்தினை கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர் மூலம் கோரியுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களாக சேவை செய்துவரும் ஆசிரியர்களில் போதிய தகமை உள்ளவர்களுக்கு இந்த 4000

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை உலகை வியப்பில் ஆழ்த்திய கரும்புலிகள் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

'கரும்புலிகள் நாள்' நாளை தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கெதிரான அனைத்து சக்திகளுக்கெதிராகவும் அகில உலகமே வியக்கத்தக்கவகையில் வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுத்து வீர காவியம் படைத்த கரும்புலிகளின் நினைவாக "கரும்புலிகள் நாள்" அனுஷ்டிக்கப்படுகிறது

தமிழீழத்தின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த ஜூலை 5 ஆம் திகதியை கரும்புலிகள் நாளாக விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து தமிழீழ மக்கள் அனைவரும் நாளைய கரும்புலிகள் நாளில் தமது உணர்பூர்வமான அஞ்சலியை கரும்புலிகளுக்கு செலுத்த உள்ளனர்.

### வடதமிழீழம் மெங்கும் எழுச்சிக கோலம்

நாளைய கரும்புலிகள் நாளையொட்டி வட தமிழீழத்தின் பெரும்பாலான பகுதிகள் எங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. யாழ். குடாநாடு மட்டுமல்லாது வன்னிப்பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலும் கரும்புலிகள் நாளை ஒட்டிய முன்னேற்பாடுகள் கடந்த இருவாரங்களாக நடைபெற்று வருவதாக அங்கிருந்து எமக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கரும்புலிகள் நாளுக்கான சகல முன்னேற்பாடுகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன. குடாநாட்டின் சகல பிரதான வீதிகள் தோறும் கரும்புலிகளின் வீர சாதனைகளைப் பறைசாற்றும் பதாகைகள் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட கரும்புலிகள் நாளை குறிக்கும் வகையிலான பல்வேறு சுவரொட்டிகள் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன் வீதிகளில் பயணம் செய்யும் ஆட்டோ றிக்சோ முதல் பேருந்துகள் வரை அனைத்து வாகனங்களும் கரும்புலிகள் நாள் தொடர்பான பதாகைகளைத் தாங்கியவண்ணம் பவனி வருகின்றன.

மேலும் கரும்புலிகளின் வீர சாதனைகளை பறைசாற்றும் வகையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் இரவு பல் வேறுபாடின்றி நடைபெற்று வருகின்றன.

மேலும் வீரச்சாவடைந்த கரும்புலிகளின் உருவப்படங்கள் குடாநாட்டின் முக்கியமான இடங்களில் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் கரும்புலிகள் நாளையொட்டி பல்வேறு இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### தென்மராட்சியில்:-

தென்மராட்சிப் பகுதியிலும், பளைஅரசன் நகர் என்னும் பகுதியில் வீதிகள்புனரமைப்பு, மற்றும் சமூக நிலையங்கள் புனரமைப்பு, கம்புத்தொழிற்சாலைக் களஞ்சியம் புனரமைப்பு வேலைகளும், ஊரியான் கிராமத்தில் வாய்க்கால் திருத்தல், சூழல் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் மீசாலைவீதி ஐயாகடைச் சந்தியில் நிறுவபபட்ட கரும்புலிகளின் உருவப்படம் நாளை காலை 7.30 மணிக்கு திரை நீக்கம் செய்து வைக்கப்படும். அத்துடன் மாலை 7.05 மணியளவில் மீசாலை விக்னேஸ்

(6 ம் பக்கம் பார்க்க)

## தொப்பிகலப் பகுதியில் புலிகள் - இராணுவம் மோதல்

கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் காயமடைந்ததாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### பல்கலைக் கழக அனுமதி:

## புறநிலை தகைமைக்கு புள்ளிகள் கிடைக்கும்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் அனுமதிக் கல்வித் தகைமைகளுக்கு வழங்கும் புள்ளிகளுடன் கல்வியோடு இணைந்த புற திறமைகளுக்கும் புள்ளிகள் பல்கலைகழக அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றை பல்கலைக்கழக மானியங்கள் குழு வெளியிட்டுள்ளது.

விளையாட்டு, அரசியல் போன்ற துறைகளில் மாணவர்கள் பள்ளிக்கூடம், மாவட்டம், தேசிய மற்றும் சர்வதேச மட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்ட ரீதியாக பரீட்சை மாணவர்களுக்கு பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பிரதேசத்திலுள்ள ஆறு கல்விக் கோட்டங்களும் 1993ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சையை தனித்தனி நடத்த முன்வந்துள்ளன. இதற்கென ஒவ்வொரு கோட்டமும் தனித்தனி வினாத்தாள்களைதயாரிக்கவுள்ளன.

இதனால் பரீட்சைக்கட்டண ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கோட்டங்கள் தனித்தனியாக பரீட்சைகளை நடத்தவுள்ளதால் மாணவர் தொகை குறைவாக உள்ள கோட்டங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் கூடுதல் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தவேண்டி ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இராணுவ நடவடிக்கைகளால் பெருமளவில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வெட்டுப்புள்ளியில் பாரபட்சம்; மாணவர் எதிர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உயர்தர) 1990ல் விசேட பரீட்சையில் தோற்றியவர்களுக்கு பல்கலைக் கழக வெட்டுப்புள்ளியில் பாரபட்சம் காட்டப்பட்டதை எதிர்த்து பல்கலைக்கழகமானியக் குழுவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து பொறியியல் பீடம் தவிர்ந்த ஏனைய பீடமாணவர்களும் ஆரம்பமுயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

இவ் விவகாரத்தில் பொறியியல் பீட மாணவர்கள் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு எதிராக வழக்குத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண முத்திரைகள் 'குமாரி'யில் வரும்

(யாழ்ப்பாணம்)

சுமார் 61 மில்லியன் ரூபா பெறுமதியான இடம்பெயர்ந்தோர் இலவச நிவாரண முத்திரைகள் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன.

இன்னும் சில தினங்களில் கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்படவுள்ள "குமாரி" கப்பலிலேயே மேற்படி உணவு முத்திரைகள் எடுத்துவரப்படவுள்ளன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்குமுன் பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (5242)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித் தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898,

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-6931)

### விணணப்பம் கோரப்பட்டுள்ளது

(வடமராட்சி)

வதிரியில் இயங்கிவரும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடாத்தும் தமிழ், ஆங்கில மொழி மூலமான மேற்படி பயிற்சிக்கு பாடசாலையை விட்டு விலகிய 15 — 25 வயதுக்கு இடைப் பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## மாவீரர் உருவப்படங்கள் மேலும்வெளிவந்துள்ளன

1991ஆம் ஆண்டில் ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு பிரதேசத்தில் தம்மை தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட கீழ்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிடபுச் செலுத்துவதன் மூலமாக, தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று மாவீரர் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

| இல. | இயக். பெயர் | சொந். பெயர் | இடம். |
|---|---|---|---|
| 01 | வீ.வே, சஜன்மாமா | சுந்தரராஜா மகேஸ்வரன் | வட்டுக்கோட்டை-யாழ். |
| 02. | ,, துளசி | இரஞ்சிதமலர் ஜயாத்தம்பி | கொடிகாமம், யாழ். |
| 03. | 2-ம்லெப். நார்த்தீபன் | அழகராசா புஸ்பராசா | பருத்தித்துறை, யாழ் |
| 04. | வீ வே. மது | மணிவாசகம் வரதராயன் | வட்டுக்கோட்டை, யாழ். |
| 05. | ,, ரொமேஸ் | வடிவேல் முத்துக்குமார் | முல்லைத்தீவு: |
| 06. | ,, நிசாம் | கந்தராசா தர்மராசா | திருக்கோயில், அம்பாறை. |
| 07. | 2-ம் லெப். வெற்றிச் செல்வன் | ஸ்ரனிஸ்லொஸ் நிகிதராஜ் | பேசாலை, மன்னார். |
| 08. | வீ. வே. லோகா | கோமதி சக்திவேல் | இதயநகர், கிளிநொச்சி, |
| 09. | ,, சுதா | கந்தையா குணநாதன் | வாழைச்சேனை, மட்டு. |
| 10. | லெப். சந்திரன் | நடராசா நவதாஸ் | அச்சுவேலி, யாழ். |
| 11. | வீ. வே. வர்மா | சோமசுந்தரம் சிவசுதன் | அத்தாய், பூநகரி. |
| 12. | ,, பூர்ணிமா | வசந்தி பேரம்பலம் | கொழும்புத்துறை, யாழ் |
| 13. | 2-ம் லெப். அகிலன் | கதிர்காமு பாலச்சந்திரன் | முள்ளியான், வெற்றிலைக்கேணி. |
| 14. | லெப். வினோத் | மோகனதாஸ் சுரேஸ் | காங்கேசன்துறை யாழ். |
| 15. | ,, வாகினி | தேவராணி கந்தசாமி | வாழைச்சேனை, மட்டு. |
| 16. | கப்டன் டக்களஸ் | விகனேஸ்வரராஜா சதீஸ்வரன் | மானிப்பாய். |
| 17. | வீ வே. மரிஸ்ரெலா | கொலின் கலிஸ்ரா மரியாம்பிள்ளை | வெற்றிலைக்கேணி, யாழ். |
| 18. | வீ. வே. சசி | சுப்பிரமணியம் குமரன் | பருத்தித்துறை. |
| 19. | 2-ம் லெப். சதானந்தன் | சேனாதிராஜா கேதீஸ்வரன் | பொன்னாவெளி, மன்னார். |

## அதிபர் பதவி வெற்றிடங்கள் மாதமுடிவுக்குள் நிரப்பப்படும்

(கொழும்பு)

பாடசாலை அதிபர் பதவிகளில் காணப்படும்வெற்றிடங்கள் அடுத்த சில வாரங்களில் நிரப்பப்படும் என்று கல்விச் சேவைகள் சபை அறிவித்துள்ளது

இதன்படி அதிபர் தரம் - 1 தரம் - 2, தரம் - 3 க்கான பதவிகள் யாவும்இம்மாத முடிவுக்கு முன்பாக நிரப்பப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் படி தற்போது பதில் அதிபர்களாகக்கடமையாற்றும்சுமார் 2500 ஆசிரியர்களும் நிரந்தர அதிபர்களாக நியமனம்பெறவுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

### அன்பளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் வட-இந்து மகளிர் கல்லூரிக்கு ஒலிபெருக்கியும் அதற்குரிய சாதனங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளார். (யோ)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்துரை நீக்லஸ்

அச்சுவேலி அன்னை தெரேசா சனசமூக நிலைய நிறு

### மாணவர்களின் பண்பாடு

## தனியார்கல்வி நிறுவனத்தால் தேய்ந்து செல்கின்றன

(நெல்லியடி)

"சோதனையால் நோய்க்காளாகிய மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களாகிய டாக்டர்களிடம் செல்வதனால் பரீட்சையில் உயர்ந்து பண்பாட்டில் தேய்கின்றார்கள்."

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை மாலை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி எல். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்லூரி மாணவர்களின் பானட் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினர்களும் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மங்கள விளக்கையும், தேசியக் கொடியையும் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கமும், கல்லூரிக் கொடியை வடமராட்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரையும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து அங்கு பேசிய திரு. சுந்தரலிங்கம்;

தனியார் ரியூசனுக்கு சைக்கிளில் செல்லும மாணவர்கள் எம்மைப் போன்ற 60ஐக் கண்டால் எம்முடன்முட்டிமோதிச் செல்கின்றனர். அதேவேளை றோட் முழுவதும் சீதனமாக பெற்றதுபோன்ற எண்ணத்தில் அதனையும் ஆக்கிரமிக்கின்றார்கள் என்று கூறிய அவர், ஒரு கிராமத்தின் எதிர்பார்ப்புக்கள் ஒரு கல்லூரியையே சார்ந்திருக்கும் மாணவர்களுக்கு முழுமையான கலாசாரம், மொழி, இனப்பற்று, தெய்வப்பற்று இருப்பது அவசியமாகுமென்றும் தெரிவித்தார். தற்பொழுது யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்திருப்பதற்கான விளக்கத்தையும் எடுத்துரைக்கையில், இங்கு பணியாற்றிய பல ஆசிரியர்கள் கொழும்பில் பணியாற்ற ஓடிவிட்டனர். அவர்கள் அங்கு நின்று கொண்டு எப்போ யாழ்ப்பாணம் திரும்புவோமென அங்கலாய்ப்பு அடைகின்றார்கள்.

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் 185 மாணவர்கள் படிக்கிறார்கள் அங்கும் ஆசிரியர் பற்றாக்குறைவு. மருதங்கேணி, செம்பியன்பற்று, போன்ற பகுதிகளிலும் இதே நிலைப்பாடுதான் உண்டு. இவற்றை நீக்க வெளிமாவட்டங்களில் சேவை செய்யாத திருமணமாகாத இளைஞர்களையும், இளம் ஆசிரியைகளையும் அண்மையில் தேர்ந்தெடுத்துள்ளோம். இதனால் இப் பற்றாக்குறைவு ஓரளவு நீங்கிவிடுமென தான் நம்புவதாகவும் தெரிவித்தார். (30)

## பதவி வெற்றிடம்

பல்கலைக்கழகபட்டப் படிப்பை முடித்து தொழில் வாய்ப்பற்றிருக்கும் கலைவர்த்தக முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிபரங்களுடனான விண்ணப்பங்களை அவ்வப்பகுதி மாணவர் அமைப்பு கோட்ட செயலகங்களில் 15-07-1993க்கு முன்னராக ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் மாணவரமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31-ஆம நாள நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### சின்னத்தம்பி நடராஜா

(கடற்படை தொலைபேசி இயக்குனர்)

மறைவு:

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-04

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

யாழ்ப்பாணம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் காயமுற்று யாழ். மருத்துவமனையில் பலியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்.

1987ஆம் ஆண்டு பொலிகண்டி - நவிண்டில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கரன்** [கெஜானைமூர்த்தி சயந்தன் - உலருடயப்பிள்ளையார்கோவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை]

1988ஆம் ஆண்டு மணலாறு - அலம்பி பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். ஆனந்தி** (காமாட்சியம்மாள் தர்மரெட்டியார் - கணேசபுரம், பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்)

1989ஆம் ஆண்டு வவுனியா - கொந்தக்காரன்குளம் பகுதியில் 21 06-89இல் இந்தியப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய -

**லெப் செந்தூரன்** (வடிவேலு லோகநாதன் - கள்ளப்பாடு - முல்லைத்தீவு)

கிளிநொச்சி - பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆசிரியர்.

யாழ். மாவிட்டபுரத்தில் தேசவிரோத சக்திகளால் அடித்துக் கொல்லப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு கடலில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். ஜிம்றோன்** ( — மட்டு. )

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**வரதன்** (வேலாயுதம் மதியழகன் - 3-ம் கட்டை, தம்பலகமம் - திருமலை)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய -

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையும் வட மராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடாத்தும் தமிழ், ஆங்கில மொழி மூலமான மேற்படி பயிற்சிக்கு பாடசாலையை விட்டு விலகிய 15 — 25 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அதிபர் பதவி வெற்றிடங்கள் மாதமுடிவுக்குள் நிரப்பப்படும்

(கொழும்பு)

பாடசாலை அதிபர் பதவிகளில் காணப்படும்வெற்றிடங்கள் அடுத்த சில வாரங்களில் நிரப்பப்படும் என்று கல்விச் சேவைகள் சபை அறிவித்துள்ளது

இதன்படி அதிபர் தரம் - 1 தரம் - 2, தரம் - 3 க்கான பதவிகள் யாவும்இம்மாத முடிவுக்கு முன்பாக நிரப்பப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் படி தற்போது பதில் அதிபர்களாகக்கடமையாற்றும்சுமார் 2500 ஆசிரியர்களும் நிரந்தர அதிபர்களாக நியமனம்பெறவுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

### அன்பளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் வட-இந்து மகளிர் கல்லூரிக்கு ஒலிபெருக்கியும் அதற்குரிய சாதனங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளார். (யோ)

### சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அகன் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் வாய்க்கால் சிரமதான வேலையில் ஈடுபட்டுள்ளது நேற்றும், இன்றும் நடைபெற்றுவரும் இச் சிரமதான வேலைகளில் சுமார் 150க்கும் அதிகமானோர் கலந்துகொண்டுள்ளனர்.


## கண்ணீர் அஞ்சலி

## சின்னத்துரை நீக்லஸ்

அச்சுவேலி அன்னை தெரேசா சனசமூக நிலைய நிறுவினர்களில் ஒருவரும், அதன் பொருளாளரும், நிலையத்திற்கு அளப்பரிய சேவையாற்றியவருமான சின்னத்துரை நீக்லஸ் அவர்கள் 03-07-93இல் காலமாகிவிட்டார். அவருக்கு எமது நிலையத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, மக்கள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சுவேலி, அன்னை தெரேசா
சனசமூக நிலையத்தினர்

(5275)



அமரர்

## சின்னத்தம்பி நடராஜா

(கடற்படை தொலைபேசி இயக்குனர்)

தோற்றம்: 6-10-1934

மறைவு: 4-6-1993

அன்பு மாமாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

அன்னாரின்
பெறாமகன்: சிவநாதன்
மருமகள்: கௌரி

(5278)

## ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6938)

## கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (BLOCKs) - பழைய படங்களிலிருந்து-அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான டயர்சில்-ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6952)

## கோழிப்பண்ணை பராமரிப்பாளர்

கோழிப்பண்ணை பராமரிப்பில் குறைந்தது 3 வருட அநுபவம் உள்ளவர், வயது 40 50ற்கு உட்பட்டவர் தேவை உணவும், தங்குமிட வசதியும் செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் 12 07-93ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விள. இல. 193
C/O ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(5268)

...தலில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**2ம் லெப். ஆனந்தி** (காமாட்சியம்மாள் தர்மரெட்டியார் - கணேசபுரம், பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்)

1989ஆம் ஆண்டு வவுனியா - கொந்தக்காரன்குளம் பகுதியில் 21 06-89இல் இந்தியப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**லெப் செந்தூரன்** (வடிவேலு லோகநாதன் - கள்ளப்பாடு - முல்லைத்தீவு)

கிளிநொச்சி - பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆசிரியர்.

யாழ். மாவிட்டபுரத்தில் தேசவிரோத சக்திகளால் அடித்துக் கொல்லப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு கடலில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். ஜிம்றோன்** ( — மட்டு. )

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**வரதன்** (வேலாயுதம் மதியழகன் - 3-ம் கட்டை, தம்பலகமம் - திருமலை)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய -

**கந்தசாமி பாலா** ( — கள்ளிப்பிட்டி, கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

மன்னார் - முருங்கன் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**அமல்ராஜ்** (அன்ரன் நோபேட் (தம்பி) வேளாங்கண்ணி வீதி, சாவற்காடு - மன்னார்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல்போன பொத்துவிலைச் சேர்ந்த 07தமிழர்கள்.

மணலாறு- கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பாடசாலை, தேவாலயம் ஆகியவற்றின்மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

மன்னார்-தள்ளாடி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

காரைநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தாய், மகன் ஆகிய இரு தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் அவர்களது கண்காணிப்பிலுள்ள கந்தபுரம் பகுதியில் வீதியோரத்தில் அழுகிய நிலையில் சடலங்களாகக் காணப்பட்ட 02தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு திருமலை-பன்குளம் வீதியில் சிறிலங்கா விமானப்படையினர் மீதான அதிரடித் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**லெப் மல்லன் / வீமன்** (சுந்தரலிங்கம் சசிக்குமார் -கள்ளிமேடு, தம்பலகமம் திருமலை)

புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**மருதன்** (அந்தோனிப்பிள்ளை றொபின்சன் யோண்சன்- கண்ணாட்டி-வவுனியா)

புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**இளம்பிறை** (சின்னத்தம்பி விக்னேஸ்வரமூர்த்தி-முகாவில் இயக்கச்சி)

ஊரியான் பாதையால் வரும்போது சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான மலலாகத்தைச் சேர்ந்த தமிழ்மகன்.

சுன்னாகம் பகுதியில் நாகம்ஸ் திரையரங்கு முன்னால் விமானக்குண்டுவீச்சில் பலியான ஒரு தமிழ்மகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6949)

# கட்சி மாறும் செய்திக்கு சிறிசேனகூரே மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் தற்போதைய ஜனாதிபதியும் அடிப்படைக் கொள்கையில் ஒன்றுபட்டவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதில் சற்று வித்தியாசமான வழிகளைப் பயன்படுத்துகின்றனர் என அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்,

தற்போது லண்டன் சென்றுள்ள அவர் பி.பி.சி. சிங்களசேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கொள்கையில் வேறுபாடு இல்லாமையினால்தான் எந்தக் கட்டத்திலும் கட்சியிலிருந்து விலகவோ அன்றி வேறு கட்சியை ஆதரிக்கவோ புதிய கட்சியை அமைக்கவோ போவதில்லை என்றார்.

மேலும் அவர் வேறு கட்சியில் சேரவிருப்பதாக வெளிவந்த செய்தியை முற்றாக மறுத்தார். மக்கள் இன்று சில மாறுதல்களையே எதிர்ப்பதாகவும் அதற்கு இணங்கவே தற்போதைய ஜனாதிபதி இதனை நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்தஅமைச்சர் சிறிசேனகூரே யார் மறைந்தாலும் ஐக்கியதேசிய கட்சியின் அடிப்படைக்கொள்கை மாறப்போவதில்லை ஆனால்காலத்திற்கேற்ப அது நடைமுறைப்படுத்தும்விதம் மாறலாம்.எனவே ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் தெளிவாக இருப்பதாக தெரிவித்தார்.

## உரிய முறையில் விண்ணப்பிக்க பணிப்பு

அரச ஊழியர்கள் 45 வயதைக் கடந்த பின்னர் வினைத்திறமைகாண் தடையிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்கும்போது அதற்குரிய மாதிரிப்படிவத்துக்கமைய விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்தல் அவசியம் என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்உரியமாதிரிப்படிவத்துக்கமைய அனுப்பப்படாத விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதனால் அது காலதாமதம் செய்யப்படவோ அல்லது பூரணமாக நிராகரிக்கப் படவோ வாய்ப்பாக அமையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார், (17)

தொலைபேசிக் கட்டணம்

## அரசியல்வாதி மனைவியால் 3.3 மில். அரசு செலுத்தியது

[கொழும்பு]

பிரபல அரசியல்வாதியின் மனைவி ஒருவர் கடந்த வருடத்தில் எடுத்த சர்வதேச தொடர்புகளுக்காக அரசு 3.3 மிலலியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக தொலைதொடர்பு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் அந்த அரசியல் வாதியின் உத்தியோகபூர்வமான தொலை பேசி மூலமே தனிப்பட்ட அழைப்புகளை எடுத்ததாகவும் இதற்கென 1992 டிசம்பர் மாதத்தில் மட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொகைக்கு தொலைபேசி கட்டணம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கட்டணத்தை தொலைபேசி திணைக்களத்திற்கு அரசாங்கமே தற்போது செலுத்த வேண்டியுள்ளது.

அந்த அரசியல்வாதியின் மனைவி உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இருந்தபடியே சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்துள்ளார்.

அமெரிக்காவில் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கும் அவரின் மகனுக்கு எடுத்த தொலைபேசி கட்டணம் அதிகமாக உள்ளது. 53 நிமிடங்களுக்கு பேசிய ஒரு அழைப்பிற்கு மட்டும் 4982 ரூபா செலுத்தப்பட வேண்டியிருந்தது.

1992இல் மேற்படி மனைவி நாள் ஒன்றுக்கு சராசரியாக எட்டு சர்வதேச தொலைபேசி அழைப்புகளை எடுத்திருந்தமை அறியப்பட்டுள்ளதாக தொலை தொடர்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கஞ்சா வைத்திருந்த பிக்குணி கைது

கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றஞ்சாட்டின் பேரில் அநுராதபுரத்தில் பிக்குணி ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அத்துடன் இவர் கடந்த பெப்ரவரி மாதத்தில் பலரை இந்திய யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாக கூறி அவர்களிடம் பெருந்தொகையில்

யால் அநாதரவாக விடப்பட்டனர் என்றும் அதன்பின் பிக்குணி தலைமறைவாகி விட்டார் என்றும் கூறப்படுகிறது. இந்த பிக்குணி கொழும்பு புறநகர் பகுதியில் ஜப்பானில் வேலை பெற்று தருவதாகக் கூறி முகவர் நிலையம் ஒன்றை நடாத்தியதாகவும் கூறப்படுகிறது. ஜப்பானுக்கு

கொழும்புக்கு அனுப்பப்படும்

## வைத்திய உபகரணங்கள்; மீள அனுப்புவதில்அசமந்தம்

அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

கிராம ஆஸ்பத்திரிகளிலிருந்துதிருத்தம்செய்வதற்கென்று கொழும்புக்கு அனுப்பப்படும் ஆஸ்பத்திரி உபகரணங்களைத் திருப்பியனுப்புவதற்கு ஒரு வருடத்துக்குமேலாகிறது சில சமயங்களில் அவை திருப்பி அனுப்பப்படுவதே இல்லை என்று புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் சமூகசேவைகள் அமைச்சர் பி. தயாரெத்தின தெரிவித்தார்.

உயிரியல் மருத்துவ தொழில்நுட்பப் பிரிவை ஆரம்பித்து வைத்துப் பேசிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராம ஆஸ்பத்திரிகளில் இருந்து அனுப்பப்படும் இவ் உபகரணங்களை உரிய காலத்தில் திருத்தியனுப்பும்படிஅவர் சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சைக் கேட்டுள்ளார்.

## இனப்பிரச்சினைக்கு தீர்வு உடன் காணப்பட வேண்டும்

பீட்டர் கெனமன் வலியுறுத்து

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதன் மூலம் யுத்தத்திற்கு முடிவு காணப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பீட்டர் கெனமன் கூறியுள்ளார். கட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக தமது இல்லத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய பீட்டர் கெனமன் அங்கு மேலும் கூறுகையில்:

1940களில் ஐக்கிய சோசலிசக்கட்சியாக செயற்பட்டுவந்த போதும் 1943-ல் லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து விலகியோரால் 1943 ஜூலை 3-ல் கம்யூனிஸ்ட்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. கட்சியின் ஐம்பதாவது ஆண்டுக்கொண்டாட்டங்களும் இடதுசாரி சக்திகளை ஒருங்கிணைப்பதையே முக்கிய இலக்காக கொண்டுள்ளது.

கம்யூனிச இயக்கத்திற்கு சர்வதேச ரீதியில் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருப்பது உண்மையே எனினும் அதனால் இலங்கைக் கம்யூனிச கட்சி பாதிப்பு அடையவில்லை என்றும் சோசலிசத் தத்துவம் தோல்வி கண்டு விடவில்லை என்றும் தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிசகட்சியானது தனது ஐம்பது வருட வரலாற்று அனுபவத்தின் ஊடாக தவறுகளை இனம் கண்டு திருத்தியும், தந்திரோபாய ரீதியான மாற்றங்களை செய்தும் இடதுசாரிச் சோசலிச எண்ணத்தை முன்னொடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## ராக்கிங் கொடுமை மாணவிக்கு மனநோய்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ மாணவி ராக்கிங் என்ற பெயரில் நடத்தப்பட்ட துன்புறுத்தலால் மனநோயாளராகியுள்ளார்.

டி. எம். ஜிம்ஹானி என்ற மாணவி மருத்துவ கற்கை நெறியை மேற்கொள்வதற்காக பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் 1993இல் அனுமதிக்கப்பட்டார் சிரேஷ்ட மாணவரின் ராக்கிங் நடவடிக்கையால் இந்த மாணவி மனநோயாளரான நிலையில் பேராதனை போதனா வைத்திய சாலையில் உளவளச் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொடகாவெல கிராமத்திலிருந்து 1993இல் மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகியவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. எனது சகோதரி குணமடையாவிட்டால் நாம் வாழ்வதில் பயனில்லை' என்றார் அவர் சகோதரர் பாலித்த.

## தெரிவு

பளை வேம்போடுகேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினராக 15 பேர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன் தலைவராக திரு.மு. பொன்னுத்துரை, செயலாளராகதிரு. அ கிருஷ்ணமூர்த்தி, பொருளாளராகதிரு.சி.பேரம்பலம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் ஈ. ஐயாத்துரை அவர்களும், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா அவர்களும் கலந்துகொண்டனர். (86)

### பொது அறிவுப் போட்டி

உலக தமிழர் பண்பாட்டு இயக்கம் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களிற்கிடையில் பொது அறிவுப் போட்டியை நடாத்த இருக்கிறது. இதற்கான விண்ணப்பத்தை உலக தமிழர் பண்பாட்டு இயக்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (88)

### சான்றிதழ் வழங்கல்

[சுன்னாகம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவினால் நடாத்தப்பட்டதையல் பயிற்சி நெறியில் பங்குகொண்டு சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## புங்குடுதீவில் கோயில் கொண்ட




## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

எமது நிலையத்தால் 04-07-93-ல் நடத்தப்பட இருந்த மாபெரும் மாட்டுவண்டிச்சவாரி தவிர்க்கமுடியாதகாரணத்தால்பிற்போடப்பட்டு11.7.93 ஞாயிறு மாலை 2 மணிக்கு நடத்த தீர்மானித்துள்ளோம்,

தலைவர்
செல்வ விநாயகர் சனசமூக நிலையம்
(சி5276)

புற்றளை சித்தி விநாயகர்

## பூங்காவன உற்சவம் 4-7-93 (இன்று)

மேற்படி ஆலய பூங்காவனத்தை முன்னிட்டு இன்றிரவு திரு. V.K. கானமூர்த்தி, திரு.V.K. பஞ்சமூர்த்தி, திரு. பஞ்சாபிகேசனின், நாதஸ்வர, தவில் கச்சேரியும், சாந்தனின் இன்னிசை வார்ப்பும் இடம் பெறவுள்ளன.

பூங்காவன விழாக் குழுவினர்.
(சி-6954)

அனைத்து தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்கள், மகளிர் குழுக்கள் அனைவருக்கும்

## கரும்புலிகள் நாள் யூலை 5

தமிழீழ மக்களின் சுதந்திர விடிவிற்காக, அந்நியப் படையை நம் "மண்ணிலும், கடல்பரப்பிலும் இருந்து அகற்ற உலகமே" வியக்கும் வண்ணம் தம் தற்கொடையினால் காற்றோடும், கடலோடும் சங்கமித்த உன்னத மறவர் குலத்துதித்த மாவீரரான இலட்சிய வேங்கைகளின் தினமான கரும்புலிகள் நாள் யூலை 5ல் அவர்களின் தியாகத்தை உணர்வு பூர்வமாக நினைவு கொள்ளும் வகையில் உரிய இடங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நாளில் சங்கங்களின் மது விற்பனைக் கிளைகளில் கொள்வனவு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ. ச.சமாசம்

இல. 499 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-6944)

## அறிவித்தல்

1991-ம் ஆண்டு ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை

மேற்படி பரீட்சையினாற் பாதிப்படைந்த சகல மாணவ மாணவிகளையும் (பொறியியற் பிரிவு தவிர்ந்த) பெற்றோர்களையும் 1993 07.06-ம் திகதி பிற்பகல்3 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்ட

டிசம்பர் மாதத்தில் மட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொகைக்கு தொலைபேசி கட்டணம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கட்டணத்தை தொலைபேசி திணைக்களத்திற்கு அரசாங்கமே தற்போது செலுத்த வேண்டியுள்ளது.

...தது.

1992இல் மேற்படி மனைவி நாள் ஒன்றுக்கு சராசரியாக எட்டு சர்வதேச தொலைபேசி அழைப்புகளை எடுத்திருந்தமை அறியப்பட்டுள்ளதாக தொலை தொடர்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கஞ்சா வைத்திருந்த பிக்குணி கைது

கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றஞ்சாட்டின் பேரில் அநுராதபுரத்தில் பிக்குணி ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அத்துடன் இவர் கடந்த பெப்ரவரி மாதத்தில் பலரை இந்திய யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாக கூறி அவர்களிடம் பெருந்தொகையில் பணத்தை அபகரித்துவிட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

யாத்திரைக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் சென்னையில் உள்ள மகாபோதி சங்கத்தில் மேற்படி பிக்குணியால் அநாதரவாக விடப்பட்டனர் என்றும் அதன்பின் பிக்குணி தலைமறைவாகி விட்டார் என்றும் கூறப்படுகிறது. இந்த பிக்குணி கொழும்பு புறநகர் பகுதியில் ஜப்பானில் வேலை பெற்று தருவதாகக் கூறி முகவர் நிலையம் ஒன்றை நடாத்தியதாகவும் கூறப்படுகிறது. ஜப்பானுக்கு அனுப்புவதாகக் கூறி இவர் ஒருவரிடம் 200,000 ரூபாவை பெற்றுக்கொண்டாராம். பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பனை விதை நடுகைக்கு பரிசளித்து ஊக்குவிப்பு

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊக்குவிப்புடன் கடந்த ஆண்டு முழங்காவில் பிரதேசத்தில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பூநகரி தெங்கு. பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தால் சங்க எல்லைப் பரப்புக்குட்பட்ட பகுதிகளை இணைத்து பனம் விதை நடுகைப் போட்டி நடாத்தப்பட்டது.

விதைகள் நாட்டிய எண்ணிக்கையின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. இந்தப் போட்டியிலே சுமார் 100 விதைகளை நாட்டிய 15 பேரும், 200 விதைகளை நாட்டிய 22 பேரும் 500 விதைகளை நாட்டிய ஒருவரும் வெற்றியீட்டியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் கடந்த மே மாதம் 1ஆம் திகதி முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள சோலை பாடசாலையில் நடைபெற்ற உற்பத்தி எழுச்சிவார வைபவத்தில் வழங்கப்பட்டது.

பூநகரி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து முழங்காவில் பிரதேசத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு பூநகரி ப. நோ. கூ. சங்கம் 21,900 பனம் விதைகளை கொள்வனவு செய்து வழங்கி நாட்டியுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

முதற்கட்டமாக நட்ட விதைகளின் எண்ணிக்கையோடு தற்போது முளைத்து பராமரிப்பில் உள்ளதைப் பார்வையிட்டு இவ்வாண்டில் 5 பேருக்கு பரிசு வழங்கப்படவுள்ளது. இதே போன்று 94, 95ஆம் ஆண்டுகளில் பராமரிப்பு வளர்ச்சி போன்றவற்றைப் பார்வையிட்டு முதல் 3 பேருக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் ஊடாக பூநகரி தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் முழங்காவில் பிரதேசத்தில் 1992-ம் ஆண்டில் 28,300 பனம் விதைகளை நாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நெறியை மேற்கொள்வதற்காக பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் 1993இல் அனுமதிக்கப்பட்டார் சிரேஷ்ட மாணவரின் ராக்கிங் நடவடிக்கை

### பொது அறிவுப் போட்டி

உலக தமிழர் பண்பாட்டு இயக்கம் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களிற்கிடையில் பொது அறிவுப் போட்டியை நடாத்த இருக்கிறது. இதற்கான விண்ணப்பத்தை உலக தமிழர் பண்பாட்டு இயக்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (88)

இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. எனது சகோதரி குணமடையாவிட்டால் நாம் வாழ்வதில் பயனில்லை' என்றார் அவர் சகோதரர் பாலித்த.

### சான்றிதழ் வழங்கல்

[சுன்னாகம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவினால் நடாத்தப்பட்டதையல் பயிற்சி நெறியில் பங்குகொண்டு சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப 3.00 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினராக 15 பேர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன் தலைவராக திரு. மு. பொன்னுத்துரை, செயலாளராகதிரு. அ. கிருஷ்ணமூர்த்தி, பொருளாளராகதிரு. சி. பேரம்பலம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் ஈ. ஐயாத்துரை அவர்களும், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா அவர்களும் கலந்துகொண்டனர். (86)


புங்குடுதீவில் கோயில் கொண்ட



## அத்தனே அந்தோனி

அமைதியை ஆண்டவர்பால் வேண்டி அருளும்

ராகம் : பெஹாக் தாளம் : ஆதி - சதுரஸ்ரம்

அருஞ்செல்வத் தேவ அருள் ஒன்றே போதும்
அந்தோனியாரே இறைஞ்சுகிறோம்.
பெருஞ்செல்வம் அருளும் அருந்தவ முனியே
திருப்பூங்குடியிலே அமர்ந்தவனே.

புதுமை செய்தாய் பொலிந்திட உலகம்
புத்தொளி பெறவே புகன்றாய் வேதம்
மதுமலர்ப் பொழில்சூழ் மாதலமான
மகிமைப் பூங்குடி உறைபவனே.

நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகினோம் தேவா
நின்னடி காணவே விழைகின்றோம்.
கனிந்து உன் அருளைக் காசினி மீதினில்
கண்டு நாம் பெறவே துடிக்கின்றோம்.

சமரஸ சன்மார்க்க சாந்தியின் சின்னமாய்
சந்ததும் விளங்கும் அந்தோனியாரே
அமைதியை ஆண்டவர்பால் அந்தோனியாரே வேண்டி
அடியாரைப் பூங்குடி அழைத்திடுவீர்.

இயல் இசை வாரிதி
யாழ்ப்பாணம் மா. த. ந. வீரமணிஐயர்

விளம்பர அன்பளிப்பு :

மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ
(புடைவை மாளிகை)
13-14 பெரியகடை, யாழ்ப்பாணம்.

பாலவிநாயகர் ரேடர்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி.

நேசன் புடைவை மாளிகை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

சிவநாதன்ஸ்
(புடைவை மாளிகை)
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஏ. பி. மகேந்திரா ரேடர்ஸ்
80, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

நித்தியா நகைமாளிகை
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. செ. தில்லைநாதன் J. P
புங்குடுதீவு - 12

(5253)


இந்நாளில் சங்கங்களின் மது விற்பனைக் கிளைகளில் கொள்வனவு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்

இல. 499 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-6944)

## அறிவித்தல்

### 1991-ம் ஆண்டு ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை

மேற்படி பரீட்சையினாற் பாதிப்படைந்த சகல மாணவ மாணவிகளையும் (பொறியியற் பிரிவு தவிர்ந்த) பெற்றோர்களையும் 1993 07.06-ம் திகதி பிற்பகல்3 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் ஒன்றுகூடும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இணைப்பாளர்
நடவடிக்கைக் குழுவின் சார்பில்.

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர்சங்கம்,
யாழ்ப்பாணம், 1993-07-02. (சி/6953)

## 1-ம்ஆண்டு நினைவு நாளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## காசிப்பிள்ளை கைலைநாதன் [மயிலிட்டி]

தோற்றம்: 15-05-1930 மறைவு 17-06-1992

தோப்பாக நானிருந்தேன் நீ வாழ்ந்த காலமதில்
இப்போ தனிமரமாய் ஆகிவிட்டேன்-உனை
இழந்த காரணத்தால் ஓராண்டு ஓடட்டும்-நீ
சொன்ன உரையெல்லாம் ஓடவில்லை
உடல் ஆண்டு-மனம் ஆண்டு-ஒரு
அறுபத்திரண்டாண்டு வாழ்ந்த என் தெய்வத்தை
பிரார்த்திக்கின்றேன்.

நாளை [05-07-93] அன்னாரின் நினைவாக எனது இல்லத்தில் நடைபெறுகின்ற கிருத்திய வைபவங்களிலும் அவரது நினைவாக வழங்கப்படும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

திருமதி மாலாவதி கைலைநாதன்

'தினைப்புனம்' இ. கல்யாணி
விடுதி வீதி, புலோலி மேற்கு.
பருத்தித்துறை. [5273[

## கரும்புலிகள் தினம்! ஆடி-5



### கப்டன் மில்லர்

கரும்புலி என்னும் பெயர் எமக்கு உண்டு-நாம்
அடும் பகை தகர்த்திடும் வெடிகுண்டு
காற்றோடு காற்றாய் கடலோடு - கடலாய்
கலந்திடினும்-எம்
மூச்சோடு மூச்சாய் வீச்சானீர் நெஞ்சோடு!
கரும்புலிப பிதாவானான் மில்லர் எனும் மன்னன்
கலங்கியே மிரண்டு புரண்டனன் பகைவன்
ஏற்றுகின்றோம் புலிக்கொடியை
போற்றுகின்றோம் கரும் புலியை
மாற்றுகின்றோம் முன் வரலாற்றை-பறை
சாற்றுகின்றோம் கரும்புலி மேன்மைதனை!

வட பிராந்திய
**சிகை அலங்கரிப்பாளர்**
சங்கங்களின் சமாசம்

1083, K.K.S வீதி,
நாச்சிமார் கோவிலடி,
(5261) யாழ்ப்பாணம்.

### ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

பஸ்ரியன் (சுண்டுக்குளி) சந்தியில் கண்டெடுக்கப்பட்ட சாவிக் கொத்தொன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

★

வீதியில் கண்டெடுக்கப்பட்ட நல்லையா சின்னக்கிளி (சுழிபுரம் கிழக்கு) என்பவரின் குடும்பப் பதிவுஅட்டை ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

### நிர்வாகிகள் தெரிவு

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ச. க. தனேந்திரன் தலைவராகவும், க. இரத்தினசபாபதி க நாகஜெயக்குமாரன் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், ந. கந்தவேள் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் எட்வேர்ட் ராசா, கே. சத்தியகுமா , செ. செல்வரத்தினம், து. பிறேம்குமார், நீ மயில்வாகனம், வே. சுந்தரம் ஆகியோரும் அலுவலர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### விதைநெல் விநியோகம்

(தொல்புரம்)

தொல்புரம் கமநல சேவைகள் நிலையம் 1993/94ஆம் ஆண்டிற்கான காலபோக விதைநெல் விநியோகத்தினை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் காலபோகத்திற்கான எச்4, பிஜீ34-6 பிஜி350 ரக விதைநெல் தேவையான விவசாயிகள் உடனடியாக ஒரு புசலுக்கு ரூபா இருநூறு வீதம் முற்பணம் கட்டி காரியாலய நேரத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு தொல்புரம் கமநலசேவைத் திணைக்களத்தின் பெரும் பாக உத்தியோகத்தர் திரு இ இராசேந்திரம் தெரிவித்துள்ளார். [41]

## சம்பள உயர்ச்சிகள் வழங்கப் பணிப்பு

இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட ஊழியர்களின் குடும்பங்களுக்கு அல்லது தங்கியிருப்போருக்கு மாதச்சம்பளங்களும் படிகளும் வழங்கும்போது வருடாந்த சம்பள உயர்ச்சிகளும் சேர்த்து வழங்கப்படவேண்டும்எனதாபனப் பிரதிநிதிப் பணிப்பாளர் திரு ஏ. என். ஆர் அமரதுங்க சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதம்மூலம் பணித்துள்ளார். (17)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
27 — 07 — 1956



இறைவன் அடியில்
15 — 07 — 1992

திருமதி
**அரியமலர் சுந்தரலிங்கம்**
திதி 04-07-1993

முந்நூறு நாள் சுமந்து பெற்றெடுத்த
அன்னை முகம் மீள வந்து காண்பதற்கு
காலனுனைத் தடுத்தானோ
கண்களில் நீ ஆடுகின்றாய்
நினைவலைகளில நீந்துகின்றாய்
பிரான்சிலே பூவோடும் பொட்டோடும்
இறைவனடி சேர்ந்தனையோ
தாயோடு உறவுகளும் துடிக்கின்றன.
காலங்கள் சென்றாலும் ஆறாத
எம் நெஞ்சம் வேகுதம்மா.
அன்னைக்கு அரிய மலராய்
அண்ணனுக்கு தங்கையாய்
இனிய குணமும் திறமைகளுமாய்
குடியிருந்த உன்னை காண்பதெப்போ
மனத்துயரை தீர்த்திட வந்திடுவாய் - என் மகளே
அம்மா, அம்மா என்று அலறிச் சென்றாயோ
- பொன் மகளே

சாந்தி! சாந்தி!

''மலர் இல்லம்''
சாந்த வளவு,
அளவெட்டி தெற்கு.

உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா, கணவன்,
உறவினர்கள்.

(5256)

## பாண் ரூ. 8/-

மாவின் விலை அரசாங்கத்தால் கிலோவுக்கு ரூ. 1.35 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணத்தால்,

பாண் ஒன்றின் விலை -/50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனைப் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

பாணின் விலை, நிறை, தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்.

ந. பாலவினாயகர்,
மாவட்டச் செயலாளர்,

**யாழ், மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,**
மணியம்ஸ் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (5269)

## கேள்வி அறிவித்தல்

கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான

**தளபாடங்கள் வழங்கலும், விநியோகித்தலும்**

மேற்படி தளபாடங்கள் வழங்கலும் விநியோகித்தலுக்குமான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 07-07-1993-ம் திகதி காலை 10-00 மணிவரை பிற்போடப்பட்டுள்ளது. கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும்.

பிரதேச கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம், 02-07-1993. (சி-6947)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

## பொதுத்தேர்வு ஆண்டு 13

05-07-93 அன்று நடைபெறவிருந்த பொருளியல் I, II பாடத்திற்கான பரீட்சை 12-07-93 திங்கள் நடைபெறும்.

க. சின்னத்தம்பி
தலைவர்

தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம்,
புத்தூர்.

[சி/6945]

பதிவுகள்
**01. 07. 1993**
ஆரம்பம்

## வடமராட்சியில்
## பிரபல ஆசிரியர்கள் ஒரே இடத்தில்

வகுப்புகள்
**15. 07. 1993**
ஆரம்பம்

வட பிராந்திய
**சிகை அலங்கரிப்பாளர்**
சங்கங்களின் சமாசம்

1083, K.K.S வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(5261)

---

கான எச்4, பிஜி34-6 பிஜி350 ரக விதைநெல் தேவையான விவசாயிகள் உடனடியாக ஒரு புசலுக்கு ரூபா இருநூறு வீதம் முற்பணம் கட்டி காரியாலய நேரத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு தொல்புரம் கம நலசேவைத் திணைக்களத்தின் பெரும் பாக உத்தியோகத்தர் திரு இ இராசேந்திரம் தெரிவித்துள்ளார். [41]

---

இனிய குணமும் திறமைகளுமாய்
குடியிருந்த உன்னை காண்பதெப்போ
மனத்துயரை தீர்த்திட வந்திடுவாய் - என் மகளே
அம்மா, அம்மா என்று அலறிச் சென்றாயோ
- பொன் மகளே
சாந்தி ! சாந்தி !

''மலர் இல்லம்''
சாந்த வளவு,
அளவெட்டி தெற்கு.

உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா, கணவன்,
உறவினர்கள்.
(5256)

---

05-07-93 அன்று நடைபெறவிருந்த பொருளியல் I, II பாடத்திற்கான பரீட்சை 12-07-93 திங்கள் நடைபெறும்.

க. சின்னத்தம்பி
தலைவர்

தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம்,
புத்தூர்.
[சி/6945]

---


பதிவுகள்
**01. 07. 1993**
ஆரம்பம்

# வடமராட்சியில்
## பிரபல ஆசிரியர்கள் ஒரே இடத்தில்
**கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்**
**வரைதல், சங்கீதம் இசைக்கருவிகள் வகுப்புகள்**
## ஆண்டு - 4 முதல் - A/L வரை

வகுப்புகள்
**15. 07. 1993**
ஆரம்பம்

**A/L 94/95**
பரீட்சைகளிற்கு

**OL 93**
துரிதமீட்டல்

# COLLEGE OF NEPTUNES
பருத்தித்துறை வீதி நெல்லியடிச் சந்தி

## மாணவரிற்கு விசேட ஊக்குவிப்புகள்
- பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறும் முதல் 3 மாணவரிற்கு இலவசக் கல்வி.
- வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவரிற்கு சலுகைகள் உண்டு.
- திறமை, ஒழுக்க அடிப்படையில் புலமைப் பரிசில்கள்.

பொருளியல் — வரதராஜன், அம்பலவாணர்
அளவையியல் — நவம், பிரபானந்தன்
கணக்கியல் — பிரபாகரன், அருள்
இந்து நாகரிகம் / இந்து சமயம் — நமசிவாயகுருக்கள்
தமிழ் — நவம், கணேசலிங்கம்
தூய/பிரயோக கணிதம் — நல்லையா, கருணேஸ்வரன், ஞானேந்திரன்
விஞ்ஞானம் — சிவசிதம்பரம், தங்கராசா
கணிதம் — கருணேஸ்வரன், யோகேந்திரன்
வர்த்தகம் — ராஜகுலசிங்கம்
சமூகக்கல்வி — மனோகரன்
ஆங்கிலம் — வோஜி
தமிழ் — நவம்
வர்த்தகம் — நாதகோபாலன்
பௌதிகம் — வர்ணம்
இரசாயனம் — சதீஸ், வசீகரன்
வீணை / சித்தார் / வயலின் / மிருதங்கம் — சிவகுமார்
சங்கீதம் — சந்திரா
வரைதல் — கணேசமூர்த்தி
சுகாதாரம் — பாலசுந்தரம்

[5266]

### சிந்தனைக்கு

குரு முட்டையை உடைக்கலாம் என்றால்,
சீடன், கோழிகளையும் கொன்று விடுவான்
— திபெத் நாட்டுப் பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சமாதான விரோதிகள்

இலங்கையில் இனப்பிரச்சினை இன்றைய சிக்கலான கட்டத்தை அடைவதற்கு கொழும்பிலிருந்து வெளிவரும் பெரும்பாலான சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் பங்கு கணிசமானதாகும் இவை சமாதான சூழ்நிலை ஒன்று உருவாவதை எப்பொழுதும் ஊக்குவிக்காதது மட்டுமன்றி உருவாகி வந்த நல்லெண்ண சமாதான சூழ்நிலைகள் நிலை பெறவிடவுமில்லை. இவை எப்பொழுதும் பௌத்த பேரினவாதத்தின் குரல்களாகவும் சிங்கள ஆதிக்க வெறியின் ஊது குழல்களாகவுமே இருந்தன. இலங்கையில் வாழும் சிங்களவரல்லாத நான்கில் ஒரு பங்கு மக்களை ஒருபோதும் இலங்கையின் பிரஜைகளாக, சிங்களவருடன் சம அந்தஸ்துப் பெற்ற மக்களாக அவை கருதவுமில்லை.

இப்பத்திரிகைகள் தமிழர் விவகாரங்கள், தொடர்பாக வெளியிடும் செய்திகள், தகவல்கள், உண்மைத்தன்மை, யதார்த்தம், பின்விளைவுகள், என்பனவற்றை பற்றி எதுவித சிந்தனையும் அற்றவையாகவும், ஆசிரியர் தலையங்கங்கள், கட்டுரைகள் என்பன இன வெறியைத் தூண்டுபவையாகவுமே அமைந்துள்ளன. இந்நிலையானது, இன்று நேற்றல்ல, 'இலங்கைசுதந்திர'மடைந்த காலத்தில் இருந்தே தொடர்கின்றது.

இதன் ஒரு பகுதியாகவே போர்க்கைதிகள் விடுதலை தொடர்பாக ஏற்பட்ட உடன்பாடு குறித்தும் கொழும்புப் பத்திரிகைகள் எழுதின. கடந்த காலத்தைப் போன்றே இவ் உடன்பாட்டை முறிவடையச் செய்வதிலும் கணிசமான பங்காற்றின இதில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளும் சரி, கட்டுப்பாட்டிலில்லாத பத்திரிகைகளும் சரி ஒரேவிதமாகவே நடந்து கொண்டன.

உடன்பாட்டை மிகவும் கடுமையாக விமர்சித்து ஆசிரியர் தலையங்கங்களும், கட்டுரையும் எழுதிய 'ஐலண்ட்' பத்திரிகையானதும், விடுதலைப் புலிகள் அரசாங்கத்தையும், யாழ்ப்பாணம் சென்ற சிங்களப் பெற்றோரையும், ஏமாற்றி விட்டது எனச்சாடியது. ஜனாதிபதியின் விசேட தூதுவராக யாழ்ப்பாணம் வந்து பேச்சுக்கள் நடத்திய பிரிகேடியர் வீரசேகராவையும் அவ கண்டிக்கவும் கேலி செய்யவும் தவறவில்லை. கறுத்தக் கொழும்பான் மாம் பழத்தை கூடைகூடையாகவும், செவ்விளநீரை குலைகுலையாகவும், கோழிக்கறிபுரியாணியை பார்சல் பார்சலாகவும் கொடுத்து புலிகள் ஏமாற்றி விட்டனர் எனக் குற்றப்பத்திரிகை வாசித்தது.

அதாவது, இனவாதத்தின் உச்சத்தில் நின்ற

# தி. மு. க - கருணாநிதி குடும்பச் சொத்தா?

# கட்சித் தொண்டர்கள் போர்க்கொடி!

'கிளர்ச்சியாளர்கள், தமது விசுவாசத்தைத் தெரிவித்துத் தமது நடவடிக்கைகள் குறித்துக் கவலை வெளியிட்டுள்ளனர். அத்துடன் தலைவர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து தங்களை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறுகோரிக்கை விடுத்தனர். ஆனால் தலைவர் தற்காலிகமான சமரசம் ஒன்றுக்குமட்டுமேவந்துள்ளார் எனவே சென்றமாதக் கடைசியில் தி. மு. க விற்கும் அதன் தலைவர்கருணாநிதிக்கும் எதிராகக் கட்சியில் ஒருசாராரால் மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி தோற்கடிக்கப்பட்டுவிட்டது'' இவ்வாறு கருணாநிதிக்கு விசுவாசமானவர்கள் ஆசுவாசப் பெருமூச்சை இழுத்து விடுகின்றனர்.

''மோதல் தவிர்க்கப்பட்டு விட்டது உண்மைதான். ஆனால், கெடுபிடி யுத்தம் தொடரும்'' என்றும், அதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்ந்தும் காணப்படுகிறது என்றும் தமிழகத்தின்சிரேஷ்ட பத்திரிகையாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

தி.மு.க விலிருந்து துணைப் பொதுச்செயலாளர்பதவி வகித்த நாஞ்சில் மனோகரன் பதவியிலிருந்தும், கட்சியின்அடிப்படை உறுப்பினர் தகுதியில் இருந்தும் திடீரென நீக்கப்பட்டமையானது உதிரியான ஒரு சம்பவமல்ல. ஆனால் கருணாநிதியின் தலைமைத்துவம் தொடர்பாகக் கட்சிக்குள் வளர்ந்து வரும் கருத்து வேறுபாடு. மனக்கசப்பு என்பனவற்றிற்கு மனோகரன் வெளியேற்றப்பட்டமை உத்தியோகபூர்வமான முதலாவது உதாரணம் மட்டுமே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### நாஞ்சில் மனோகரன் விலக்கப்பட்டது ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகம் எழுபதுகளில் பிளவுபட்ட போது எம். ஜி. ஆரோடு இணைந்து நின்ற நாஞ்சில் மனோகரன் பின்னர் எம் ஜி. ஆர். அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும் பணி புரிந்தார். ஆனால், 1980- ல் மீண்டும் தி. மு.க வில் இணைந்து கொண்ட நாஞ்சில் மனோகரன் அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் பதவி வரை உயர முடிந்தது. பதவி நியமனங்கள் அனைத்தும் உட்கட்சித் தேர்தல்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் தி. மு. க வில் நாஞ்சில் மனோகரன் துணைப் பொதுச் செயலாளர் பதவி வரை உயர முடிந்தது. என்றால் கட்சியினருக்கு இடையே அவருக்கு இருந்த செல்வாக்கும், ஆதரவும்தான் காரணம் ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர் என்ற காரணத்திற்காக ராஜ்ய சபா உறுப்பினரான வை .கோபால் சாமிக்கு எதிராக தி. மு. க. தலைமை நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது அதனை வன்மையாக எதிர்த்து குரல் கொடுத்தவர் நாஞ்சில் மனோகரன். கருணாநிதியின் மருமகனும், ராஜ்ய சபா உறுப்பினருமான தி. மு. க வின் புதுடில்லிக்கான பிரதிநிதி முரசொலி மாறனுக்கு இணையாக புதுடில்லியிலும் செல்வாக்குடையவர் நாஞ்சில் மனோகரன். இவைகள் நாஞ்சில் மனோகரன் ஏன் விலக்கப்பட்டார்என்பதற்கான காரணத்தை உணர்வதற்குப் போதுமானதல்ல.

தி. மு. க வின் சொத்துக்களை நிர்வகிக்கும் தி. மு க. டிரஸ்ட் எனப்படும் நிதி நிறுவனத்திற்கான நிர்வாகிகள் அண்மையில் நியமனம் செய்யப்பட்டனர். இந்த நிர்வாகிகளில் ஒருவராக நாஞ்சில் மனோகரனும் நியமிக்கப்படலாம் என்றே கட்சி வட்டாரங்களில் பெரும்பாலும் எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், ஸ்டாலினுக்கு எதிராகவும், கோபாலசாமிக்கு ஆதரவாகவும் கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் செயற்பட்ட தலைவர்களை கருணாநிதி இந்த நியமனங்களின்போது ஒதுக்கி வைத்தார். இதன் விளைவாக நாஞ்சில் மனோகரன் கருணாநிதியைக் கண்டிக்க விவகாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

### கணக்குக் கேட்டதும் கட்சி பிளந்ததும்:

இருபது வருடங்களுக்கு எம். ஜி. ஆர். தலைமையிலானோர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட போதும் 'கணக்கு கேட்டதால்தான் கட்சி பிளவுபட்டது'' என்று கூறப்பட்டதுண்டு. இப்போதும் தி. மு. க டிரஸ்டிற்கான நிர்வாகிகள் நியமனம் நாஞ்சில் மனோகரனைக் கட்சியை விட்டு விலக்க வேண்டியளவுக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்நிலையில் தான் மனம் வெறுத்துப் போயுள்ள தி. மு. க. உறுப்பினரான முன்னாள் அமைச்சர்ஒருவர் 'திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையே கருணாநிதி தனது குடும்பச் சொத்தாக மாற்றி வருகிறார் என்றுகுறிப்பிட்டார். நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி எனப்படும் மற்றொருதி.மு க.பிரமுகரோ இதற்கும் சற்று மேலேபோய் ''தி. மு. க. இப்போது கருணாநிதி அன்ட்சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட்'' என்று வர்ணித்துள்ளார்.

''அ. இ. அ. தி. மு. க வில் கூட ஜெயலலிதாவை மட்டும் திருப்திப்படுத்தினால் போதும். ஆனால், இங்கோ ஒவ்வொருவரும் தலைவர்களாக உள்ளனர். அவர்களின் சமையற்காரர் உட்பட அனைவருக்கும் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. தி. மு. க வில் கருணாநிதி குடும்பத்தவரின் ஆதிக்கம் தலைதூக்கி விட்டது'' என்று விசனம் தெரிவிக்கின்றார் தி. மு. க வின் சிரேஷ்ட கட்சித் தொண்டர் ஒருவர்.

நாஞ்சிலார் வெளியேற்றப் பட்டதைத்தொடர்ந்து கட்சிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்கள் இணைந்து பெரியதொரு எதிர்ப்பைக் காட்டியதாகத் தெரியவரவில்லை. எனினும் நாஞ்சிலார் வெளியேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மதுரையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் ''தி.மு.க தலைமைக் கட்சி ஊழியர்களையே எதிரிகள் போல் நடத்தக் கூடாது'' என்றும், நாஞ்சில் மனோகரனை வெளியேற்றுவது என்று எடுத்தமுடிவு மறுபரிசிலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்' என்றும் வை. கோபால்சாமி உட்பட வீரபாண்டி ஆறுமுகம், பொன். முத்துராமலிங்கம் போன்றோர் வலியுறுத்தினர்.

இதேவேளை சென்னையில் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாகப் பேச்சு நடத்திய நாஞ்சில் மனோகரன், ''கட்சியின் உறுப்பினராகதான் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும்'' என்று வலியுறுத்தினார். தலைமைக்கு அவதூறு உண்டாக்கும் விதத்தில் தாம் கவிதை எழுதவில்லை என்று தெளிவுபடுத்தினார். தமது கோரிக்கைக்குநல்லபதிலை எதிர்பார்த்திருப்பதாக நாஞ்சில் மனோகரன் பத்திரிகையாளர்களிடம் கூற, கலைஞர் கருணாநிதியோ மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாநிலக் கழக நிர்வாகிகளைக் கலந்து பேசியே நாஞ்சிலாரின் கோரிக்கைக்குப் பதிலளிப்பதுபற்றி முடிவெடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

இதனிடையே நாஞ்சிலார் மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டால் தினமும் ஒவ்வொருவராக இளைஞரணித் தொண்டர்கள் தீக்குளிப்பார்கள் என்று கருணாநிதியின் மகனான ஸ்டாலின் தலைமையிலான இளைஞர் அணி பகிரங்கமாக அறிவித்தது.

இவை ஒருபுறமிருக்க வை. கோபால்சாமிக்கு ஆதரவான போக்குடையவர்களை விலக்கினால் அவரைத் தனிமைப் படுத்தலாம் என்று கட்சியின் தலைமைப் பீடம் முடிவுசெய்திருப்பதாகவும் அதனைச் செயற்படுத்தும் முயற்சியில் முதற்கட்டமே நாஞ்சிலார் வெளியேற்றப்பட்டமை ஆகும் என்று தி. மு. க. தொண்டர்களிடையே அபிப்பிராயம் நிலவுகின்றது கருணாநிதியின் பிறந்ததினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட வைபவங்களில் வை. கோ. கலந்து கொள்வதைத் தவிர்க்கவும், வை. கோ வுடன் இணைந்து முக்கிய பிரமுகர்கள் மேடையேறுவதைத் தவிர்க்கவும் தி. மு. க. தலைமை முயற்சி எடுத்தது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆக, இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது, தகராறுகளுக்கான அடிப்படை அம்சங்கள் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை என்பது தெளிவானதாகிறது. தலைமைப் பீடப் பிரச்சினை, கருணாநிதியின் குடும்ப ஆதிக்கப் பிரச்சினை என்பவற்றால் தி. மு. க வின் கட்சி ஊழியர்கள் பெரிதும் குழம்பிப் போயுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாவிடின் மற்றொரு பிளவை மிக விரைவில் எதிர்பார்க்கலாம் என்கிறார் தி. மு. க விற்கு சார்பான சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் ஒருவர்.

## காவிரி நீரை திறந்துவிட கர்நாடகவிடம் கோரிக்கை

கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு சென்ற மாதத்திற்காகவும், வரும் மாதங்களுக்காகவும் 205 டி. எம். சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

கர்நாடக முதல்வர் வீரப்ப ... சாகுபடிக்கு காவிரி நீரையே நம்பியிருப்பதால் நடுவர் மன்ற தீர்ப்பை மதித்து உடனடியாக காவிரி நீரைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக பிரதமருக்கும், குடியரசுத்

## அமெ. தாக்குதல் நடத்தலாம் ஈரான் அரசு அச்சம்

(தெகிரான்)

அமெரிக்காவின் கிளிண்டன் ... முறைக் கலாசாரத்தையும் ஊக்குவிப்பதாகவே அமையும் ... எனவும் ஈரான் மேலும் கூறியுள்ளது

தமது கொழும்புப் பத்திரிகைகள் எழுதின. கடந்த காலத்தைப் போன்றே இவ் உடன்பாட்டை முறிவடையச் செய்வதிலும் கணிசமான பங்காற்றின இதில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளும் சரி, கட்டுப்பாட்டில்லாத பத்திரிகைகளும் சரி ஒரேவிதமாகவே நடந்து கொண்டன.

உடன்பாட்டை மிகவும் கடுமையாக விமர்சித்து ஆசிரியர் தலையங்கங்களும், கட்டுரையும் எழுதிய 'ஐலண்ட்' பத்திரிகையானதும், விடுதலைப் புலிகள் அரசாங்கத்தையும், யாழ்ப்பாணம் சென்ற சிங்களப் பெற்றோரையும், ஏமாற்றி விட்டது எனச்சாடியது. ஜனாதிபதியின் விசேட தூதுவராக யாழ்ப்பாணம் வந்து பேச்சுக்கள் நடத்திய பிரிகேடியர் வீரசேகராவையும் அவ கண்டிக்கவும் கேலி செய்யவும் தவறவில்லை. கறுத்தக் கொழும்பான்மாம் பழததை கூடைகூடையாகவும், செவ்விளநீரை குலைகுலையாகவும், கோழிக்கறிபுரியாணியை பார்சல் பார்சலாகவும் கொடுத்து புலிகள் ஏமாற்றி விட்டனர் எனக் குற்றப்பத்திரிகை வாசித்தது.

அதாவது, இனவாதத்தின் உச்சத்தில் நின்று கொண்டு, உண்மையை வெளியிட்ட தனது - சிங்கள- மக்களையும், தமது அதிகாரியையும் அப்பத்திரிகை வசைபாடியது. யுத்தக்கைதிகளாக மூன்று வருடங்கள் தடுப்புக்காவலில் உள்ள போர்க்' கைதிகளின் விடுதலை, ஒரு தசாப்தத்திற்கு மேலாக நீடிக்கும் இரத்தம் சிந்தும் ஆயுதப் போராட்டம்என்பனவற்றினைமுடிவிற்குக்கொண்டு வரக்கூடியதான சமாதான சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதையும் அவை கருத்திற் கொள்ளவில்லை.

இதே போன்று அரசாங்க சார்புப்பத்திரிகைகளும் நடந்துகொண்டன. அதன் உச்சக்கட்டமே, 'றுதணு' கப்பல் விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் கடலில் கொள்ளையிடப்பட்டது என்ற செய்தியாகும். இச்செய்தியானது இனவாதத்தின் உச்ச வெளிப்பாடு என்றாலும், சிங்கள மந்தைகள் மக்களை சிந்திக்கத் தெரியாதவர்கள் என எண்ணிய நிலையில் வெளியிடப்பட்ட ஒரு செய்தியாகும்.

ஏனெனில், வடபகுதி கடற்பரப்பு தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ளது என சிறிலங்கா பாதுகாபபு வட்டாரங்கள் கூறுகின்றன. இதனை சிங்களப் பேரினவாத பத்திரிகைகளும் ஏற்றுக்கொள்கின்றன. இந்நிலையில், ஒரு ஆயிரக்கணக்கான தொன்எடையுள்ள கப்பலைக்கடத்தி அதிலுள்ள 500 பீப்பா டீசல், 100 பீப்பா ஓயில், 1500 பீப்பா மண்ணெய் என்பவற்றைக் கொள்ளையிடுவதென்பது எதைக் குறிக்கின்றது. வடபகுதிக்கடல் கடற்படையின் ஆதிக்கத்தில்இல்லை என்பதையா? அல்லது புலிகளின கடலாதிக்கம் கடற்படையை விட வலுவடைந்து விட்டது என்றா? அல்லது இவ்வளவு பொருள்களும் ஏற்றப்பட்ட றுகுணு கப்பலில் இருந்து அவ்வளவு பொருள்களையும் சிறிது நேரத்தில் இறக்கி விடலாம் என்பதையா? அல்லது றுகுணு கப்பலை ஒளித்து, வைத்து இறக்க கடபல் எனை மீன்பிடிப் படகா? இதில் சிந்திக்கத் தெரிந்த சிங்களவர் எதை நம்புவது? இதே வேளை இச் செய்தியை வெளியிட்ட ஏரிக்கரைப் பததிரிகை எதை ஒப்புக் கொள்கின்றது.

இவ்வாறாக சிங்கள மக்களை குழப்பச்திலாழ்த்தும் பேரினவாதப் பத்திரிகைகள் இலங்கையில் அமைதி ஏற்பட ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இதனைச் சிந்திக்கத் தெரி த சிங்களவர்களாவது முதலில் புரிந்து கொள்ள வேண்டும், ஏனெனில் இது தமிழருக்கு மட்டுமல்ல சிங்களவருக்கும் ஆபத்தானது.

---

ற்றிற்கு மனோகரன் வெளியேற்றப்பட்டமை உத்தியோகபூர்வமான முதலாவது உதாரணம் மட்டுமே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### நாஞ்சில் மனோகரன் விலக்கப்பட்டது ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகம் எழுபதுகளில் பிளவுபட்ட போது எம். ஜி. ஆரோடு

தி. மு. க வின் சொத்துக்களை நிர்வகிக்கும் தி. மு க. டிரஸ்ட் எனப்படும் நிதி நிறுவனத்திற்கான நிர்வாகிகள் அண்மையில் நியமனம் செய்யப்பட்டனர். இந்த நிர்வாகிகளில் ஒருவராக நாஞ்சில் மனோகரனும் நியமிக்கப்படலாம் என்றே கட்சி வட்டாரங்களில் பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,

வெட ... வர்ணித்துள்ளார்.

"அ. இ. அ. தி. மு. க வில் கூட ஜெயலலிதாவை மட்டும் திருப்திப்படுத்தினால் போதும். ஆனால், இங்கோ ஒவ்வொருவரும் தலைவர்களாக உள்ளனர். அவர்களின் சமையற்காரர் உட்பட அனைவருக்கும் தலைகுனிய வேண்

கோரிக்கைக்குநல்லபதிலை எதிர்பார்த்திருப்பதாக நாஞ்சில் மனோகரன் பத்திரிகையாளர்களிடம் கூற, கலைஞர் கருணாநிதியோ மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாநிலக் கழக நிர்வாகிகளைக் கலந்து பேசியே நாஞ்சிலாரின் கோரிக்கைக்குப் பதிலளிப்பதுபற்றி முடிவெடுக்க முடியும் என்று

என்பவற்றால் தி. மு. க வின் கட்சி ஊழியர்கள் பெரிதும் குழம்பிப் போயுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாவிடின் மற்றொரு பிளவை மிக விரைவில் எதிர்பார்க்கலாம் என்கிறார் தி. மு. க விற்கு சார்பான சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவர்.

---

## காவிரி நீரை திறந்துவிட கர்நாடகவிடம் கோரிக்கை

கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு சென்ற மாதத்திற்காகவும், வரும் மாதங்களுக்காகவும் 205 டி. எம். சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லிக்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், காவிரிப் பாசனப்பகுதி விவசாயிகள் சாகுபடிக்கு காவிரி நீரையே நம்பியிருப்பதால் நடுவர் மன்ற தீர்ப்பை மதித்து உடனடியாகக் காவிரி நீரைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியிருப்பதாகவும் தமிழக அரசு கூறியுள்ளது.

---

அதிபருடனான முரண்பாடுகளைத் தீர்க்க

## பாகிஸ்தான் பிரதமருக்கு இராணுவம் காலக்கெடு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரிப் அதிபர் குலாம் இஷாக்கான் உடனான முரண்பாடுகளை இருவார காலத்தினுள் தீர்த்துக் கொள்ள வேண்டும், அல்லது புதிய தேர்தல்களை நடத்த முன்வர வேண்டும் என்று இராணுவத் தளபதி அப்துல்வஹீட் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இராணுவத் தளபதியின் இந்தக் கோரிக்கை தொடர்பாக பிரதமர் ஷெரிப் தமது ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தி வரும் அதே சமயத்தில், இஸ்லாமாபாத்தில் முப்படைத் தளபதிகளின் மாநாட்டை நடத்துவதற்கு இராணுவத் தளபதியும் அழைப்பு விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் நாற்பத்தைந்து வருட கால வரலாற்றில் பெரும்பாலான நசட்கள் இராணுவ ஆட்சியின் கீழேயே இருந்திருப்பது. குறிப்பிடத்தக்கது.

---

# அமெ. தாக்குதல் நடத்தலாம் ஈரான் அரசு அச்சம்

(தெகிரான்)

அமெரிக்காவின் கிளிண்டன் நிர்வாகம் தங்கள்மீதும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தெகிரான் அச்சம் தெரிவித்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்க நிர்வாகம் நடத்திய தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட ஈரானிய வெளியுறவு அமைச்சு மேலும்கூறுகையில்அமெரிக்கா ஐ. நா. சாசனத்தை மட்டுமன்றி, சர்வதேச ரீதியாக நாகரிக உலகினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்புகளையும் அவமதித்து விட்டது என்று தெரிவித்தது.

ஜோர்ஜ் புஷ்சை கொலை செய்ய ஈராக் செய்த முயற்சிக்கு பழிவாங்கல் என்ற போர்வையில் அமெரிக்கா நடத்திய இத்தாக்குதல் அரச பயங்கரவாதத்தையும், வன்முறைக் கலாசாரத்தையும் ஊக்குவிப்பதாகவே அமையும் எனவும் ஈரான் மேலும் கூறியுள்ளது.

---

## இராணுவ பலத்தில் 80 வீதம் ஈராக் மீண்டும் பெற்றுள்ளது

உளவுத்துறை தகவல்

(வாஷிங்டன்)

வளைகுடாப் போருக்கு முந்திய தனது இராணுவப் பலத்தில் எண்பது சதவிகிதத்தை ஈராக் மீண்டும் பெற்றுக் கொண்டு விட்டதாக அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவ்வட்டாரங்கள் வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், பொருளாதாரத்தடை விதிப்புகளும். கண்காணிப்புகளும் கூட ஈராக் தனது இராணுவ பலத்தை மீளவும் கட்டி எழுப்புவதைத் தடுக்கவில்லை என்றும், ஜோர்தான் மற்றும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளின் தனியார் கம்பனிகள் மூலம் ஈராக் மறைமுகமாக இராணுவ உதவிகளைப் பெற்று இராணுவ பலத்தைப் பெருக்கி வருகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றில் ஈராக் அணு ஆயுத பலத்தைக் கூடப் பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஐவர் சுட்டுக்கொலை

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவைச் சேர்ந்த ஐந்து பேர் நேற்று முன்தினம் கர்நாடக அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# ஜெயலலிதாஅரசுகலைக்கப்பட்டால் தி. மு. க. வருந்த மாட்டாது

## - கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையைக் காரணம் காட்டி மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் தி. மு. க. அதற்காக வருத்தப்படாது என்று தி மு க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கருணாநிதி மேலும் கூறுகையில், அ. இ. அ. தி. மு க. ஆட்சியை அகற்றிவிட்டு அவ் இடத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதைத் தி மு. க. எப்போதுமே ஏற்றுக் கொள்ளாது என்றும் தெரிவித்தார். அதேசமயம் காங்கிரஸ் கட்சி மத்தியில் புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்துவதாலும், மத நம்பிக்கைக்கு விரோதமான வகையிலும் செயலாற்றுவதால் அக்கட்சியுடன் கூட்டணி அமைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்ட நாஞ்சில் மனோகரன் மீண்டும் கட்சியில் சேர்க்கப்படுவதை செயற்குழு உறுப்பினர்கள் ஆதரிக்கவில்லை. எனவும், கட்சியின் மாவட்டச் செயலாளர்களான வை. கோபால்சாமி, பொன் முத்துராமலிங்கம்உட்படநால்வரும் கட்சியின்கட்டுப்பாட்டை ஏற்றுநடக்க வாக்குறுதிஅளித்திருப்பதாகவும்கருணாநிதிதெரிவித்தார்.

குறிப்பாக வை. கோபால்சாமி எழுதியுள்ள கடிதத்தில் கட்சித் தலைவருக்கு மன வெறுப்பை ஏற்படுத்தக்கூடியளவுக்கு நடந்துவிட்ட சம்பவங்களுக்காக மன்னிப்புக் கோரியிருப்பதாகவும் கருணாநிதி சுட்டிக்காட்டினார்.

---

## அதிபர் கிளிண்டனுடன் தனித்தனியே பேச்சு

தென் ஆபிரிக்க அதிபர் எவ். டபிள்யூ. டி. கிளார்க்கும், ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் நெல்சன் மண்டேலாவும் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனை தனித்தனியே சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தென் ஆபிரிக்காவிற்கான பொருளாதாரத் தடைகள் விரைவில் நீக்கப் படலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரத் தடைகளின் இறுதிக் கட்டத்தையும் நீக்கி விடுவதற்கு பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டது என்று தெரியவருகிறது.

---

## புலிகள் தப்பிச்செல்ல தமிழக ஆதரவே காரணம்

அமைச்சர் சவான் தெரிவிப்பு

தமிழ்நாடு சிறைச்சாலைகளிலிருந்து அண்மைக்காலத்தில் விடுதலைப் புலிகள் தப்பிச் சென்ற சம்பவங்கள், தமிழ்நாட்டில் அவர்களுக்கு இருக்கும் ஆதரவையே காட்டுகிறது என இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

எனவே தமிழ்நாடு அரசாங்கம் இவற்றைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்தது மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைக்கு உதவியாக இருந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# தமிழக கரையோரங்களில் பலத்த பாதுகாப்பாம்

## மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாடு கரையோரப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் வெடிகுண்டுகளை இறக்கும் சாத்தியக்கூறு இருப்பதனால் கரையோரப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய மத்திய உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ராஜேஸ் பைலட் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அசாம், பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக தான் நம்புவதாக தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் கரையோரமாக சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை விடுதலைப் புலிகள் இறக்கி வருகின்றனர் என்றும், பம்பாயில் சில மாதங்களுக்கு முன்னர் வெடித்த குண்டுகளுக்கு இவை சமனானவை என்றும் தெரிவித்தார்.

பிரச்சினைகளை ஏற்படுத்த ஏனைய தீவிரவாத இயக்கங்களுடன் விடுதலைப் புலிகள் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் அவர்குறிப்பிட்டார்.

## பஞ்சாலைத்தொழிலாளர்கள் கோவையில் ஆர்ப்பாட்டம்

கோயம்புத்தூரில் தென்னிந்திய பஞ்சாலைக் கழகஅலுவலகத்தின் முன்பாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள திரண்டு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஊதிய உயர்வு உட்பட பல் வேறு அடிப்படைப்பிரச்சினைகள் தொடர்பாகஉடனடியாக பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என்று கோரி நீண்ட ஊர்வலம் ஒன்றையும் அவர்கள் நடத்தினர்.

## திரிபுரா அதிகாரிகள் மீது தேர்தல்கமிஷன் நடவடிக்கை

(டில்லி)

திரிபுராவில் கடந்த ஏப்பிரலில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் நடத்திய கூட்டங்களில் கலந்துகொண்டதற்காக சிவில் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பத்துபேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென தேர்தல் கமிஷன் தீர்மானித்துள்ளது.

அத்துடன் தனது உத்தரவுகளை மீறிச் செயற்பட்டமைக்காக திரிபுராமாநில தேர்தல் ஆணையாளர் எம். தாமோதரனையும் தேர்தல் கமிஷன் கண்டித்துள்ளது.

---

### நாளை

வரா வித்தியாலய அரங்கில் பொதுக் கூட்டமும் கலை நிகச்சிகளும் நடைபெறும்.

### வடமராட்சியில் எழுச்சிக் கிராமம்

வடமராட்சிக் கோட்டத்தில் கரும்புலிகள் நினைவாலயத் திறப்பு விழாவும், நினைவு நடுகல் நாட்டலும், எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளைய தினம் இரவு 7.05 மணிக்கு வடமராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தலைமையில் கரும்புலிகள் நினைவாலயத் திறப்பு விழாவும், நினைவு அடிக்கல் நாட்டலும் இடம் பெறும்.

அல்வாய் மேற்கு கட்டைப் புளியடி கொற்றாவத்தையில் காலை 10.00 மணிக்கு எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் நிகழ்வும் இடம் பெறும். கரும் புலிகள் நினைவாகப் பூங் காவை தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் திறந்து வைப்பார்-

கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை நடுகல் திறப்பு விழாவின் போது கரும்புலிகளின் உருவப் படத்தைதிரை நீக்கம் செய்துவைப்பார். கரும்புலிகளான கப். மில்லர், கப். விஜேனாத், மேஜர் காந்தரூபன், கப்டன் சிதம்பரம், கப்டன் கொலின்ஸ், லெப். கேணல்போர்க், மேஜர் டாம்போ, கப்டன் ஜெயந்தன், ஆகியோரது உருவபடங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்படும்.

எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் வைபவத்தில் வடமராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் ஈகைக்சுடரையும் வடமராட்சித் தளபதி திரு. அருணா நினைவுச் சுடரையும் ஏற்றிவைப்பார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் நினைவுப் பேருரைகள் இடம்பெறும் மற்றும் வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரினால் 'எழுமை புதுயுகம் என்னும்' நாட்டிய

## புராதன சின்ன பாதுகாப்பு; யுனெஸ்கோ நிதிஉதவி

சிறிலங்காவின் புராதன சின்னங்களைப் பாதுகாக்க யுனெஸ்கோ தாபனம் நிதி உதவி வழங்கவுள்ளது இதன்படி சிகிரியா, தம்புல்ல மிகிந்தலை, பொலநறுவ, மொனரா கல, காலி ஆகிய இடங்களில் இருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த புராதன சின்னங்களைப் பாதுகாப்பதற்காக 217 கோடி ரூபாய்களை சிறிலங்காவிற்கு வழங்க இருக்கிறது.

ஈராக் ஜனாதிபதி சதாமை

## கொலைசெய்வதாஎனஅறிய அபிப்பிராய வாக்கெடுப்பு

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனை கொலை செய்வதை 50 சத வீதத்திற்கு மேலான அமெரிக்கர் விரும்புவதாக கடந்த வாரம் நடாத்தப்பட்ட அபிப்பிராயவாக்கெடுப்பிலிருந்து தெரியவருகிறது.

'யூ எஸ். ஏ. ருடே' என்ற பத்திரிகைக்காகவும் சி. என். என். தொலைக்காட்சி சேவைக்காகவும் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பின் போது 602 அமெரிக்கர்களிடம் தொலைபேசி மூலம் வாக்கெடுப்பு நடாத்தபபட்டது.

இவர்களில் 53 சத வீத மாணவர் சதாம்ஹூசைன் கொல்லப்படுவதை விரும்புகிறார்கள் எனவும், ஈராக் மீது அண்மையில் அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் சரியான தென 66 சதவீததினர் வாக்களித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

### நிவாரணம்

ஏற்கனவே முதற்கட்டமாக வழங்கப்பட்ட இலவச நிவாரண முத்திரைகளுக்கான கொடுப்பனவுகள் முடிவடைந்தமையைத் தொடர்ந்தே மேற்படி உணவு முத்திரைகள் இரண்டாம் கட்டமாக விநியோகிக்கப்படவுள்ளன.

மேலும் மேற்படி உணவு முத்திரைகள் வருவதில் தாமதம் ஏற்படினும் அவற்றிற்கான கொடுப்பனவுகளை, சம்பந்தப்பட்ட ப.நோ கூ.சங்கம் உரியகாலத்தில் மேற்கொள்ள யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகின்றது.

[பா], [நி]

---

### கோட்ட

இடம்பெயர்ந்த கல்விக் கோட்ட மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சைக்கிள் திருடன் காவல்துறையால் கைது

(தென்மராட்சி)

சைக்கிள்கள் களவாடிய திருடர்களை சாவகச்சேரி காவல் துறையினர் கையும் மெய்யுமாக பிடித்தனர்.

கடந்த 29ஆம்திகதி திங்கட்கிழமை சாவகச்சேரிசந்தைக்கு முன்பாக விடப்பட்ட (லுமாலா) புதிய சைக்கிள் ஒன்றை ஒருவர் களவாடிச் சென்ற போது காவல்துறையினர் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இதேவேளை இரண்டு மாதங்களுக்கு முன் கொக்குவில் புனாவாழ்வுக்கழகத்திற்கு முன்பாக விடப்பட்ட சைக்கிள் ஒன்றையும், கடந்த அன்னைபூபதியின் நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் யா/பல்கலைக்கழக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட சைக்கிள் ஒன்றையும் களவாடிய ஒருவரை விசாரணைகள் செய்த போது இக்களவுகள் பிடிபட்டு சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

இதேவேளை கடந்தகிழமை ஒரு வருடத்திற்கு முன் கைதடி சைக்கிள்கடையில் விடப்பட்டு களவாடப்பட்ட சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தகிழமை மட்டுவில் பகுதியில் கள்ளச் சைக்கிள் (பார்) சாவகச்சேரி காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மீது காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (86)

---

### திருட்டு

மீசாலை புத்தூர்ச் சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றில் விடப்பட்ட புதிய (லுமால ) சைக்கிள் ஒன்று கடந்த வாரம் இனம் தெரியாதவர்களால் களவாடப் பட்டுள்ளது இது தொடர்பாக சாவகச்சேரி காவல் துறை பணி மனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது [86

---

### மாட்டுவண்டி சவாரி

அளவெட்டி விநாயகர்விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று மாலை 2 00 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு திரு.ச. முருகநேசன் பிரதம விருந்தினராகவும், திரு திருக்குமரன்சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

---

### 4000 ஆசிரியர்

இந் நியமனத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவர்

இனிமேல் எந்தவொரு பதவியையும் தொண்டர்கள் என சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தும் சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒருதொகுதி ஆங்கிலமொழி ஆசிரியர்களும் நியமனம் செய்யபபடவுள்ளனர் இவ் 4000 நியமனங்களில்ஒரு பகுதி தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழி போதிக்கும் ஆசிரியர்களாகவும் சிங்களமொழி பாடசாலைகளுக்கு தமிழ்மொழி போதிக்கும் ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

---

### வெட்டுப்புள்ளி

தொ த்ததும் அதில் சாதகமான தீர்ப்பு கிடைத்ததையடுத்து பொறியியல்பீட அனு

## சமையல் பாத்திரம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர், அரச சார்பற்ற நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசிக்கும் சுமார் 2550 குடும்பங்களிற்கு சமையல் பாத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

---

பல்கலைக் கழக அனுமதி:

## கல்வி தவிர்ந்த நடவடிக்கை; புள்ளி வழங்கும் திட்டம்

பல்கலைக் கழக அனுமதியில் கல்வித் தகைமையுடன் விளையாட்டுப் போன்ற ஏனைய செயற்பாடுகளுக்கும் புள்ளி வழங்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்து பல்கலைக் கழக மானியங்கள் குழு வெளியிட்டுள்ளது. அதன் விபரங்கள் வருமாறு:

**பல்கலைக் கழக அனுமதி**

**கல்வி தவிர்ந்த ஏனைய திறமைகளுக்கும் புள்ளி வழங்கும் திட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| உள்மட்டம் | (பாடசாலை மட்டம்) | - | 04 புள்ளிகள் |
| வெளிமட்டம் | (தேசிய மற்றும் சர்வதேச மட்டங்கள்) | - | 16 புள்ளிகள் |
| மொத்தம் | | - | 20 புள்ளிகள் |

க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கு முந்திய 3 வருடங்களும், அப் பரீட்சைக்குப் பிறகு ஒரு வருடமும் சேர்ந்து மொத்தம் 4 வருடங்கள் பாடசாலை மட்டத்தில் மாணவரின் விசேஷ சாதனைகள் புள்ளி வழங்கல் திட்டத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பிரதேசக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் நடு நிலையான சபைகளின் விசேஷ அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

| | புள்ளி விகிதம் | உச்சப்புள்ளி |
|---|---|---|
| சிரேஷ்ட மாணவ முதல்வர்/ பாடசாலை விளையாட்டுத் துறைத் தலைவர். | | 4 புள்ளிகள். குறைந்தது ஒரு வருடம் பதவி வகித்திருக்க வேண்டும். |
| மாணவர் முதல்வர் - | வருடம் 1 புள்ளி | 3 |
| பாடசாலை 1ஆவது அணித் தலைவர் | - | 3 |
| பாடசாலை 1ஆவது அணி உறுப்பினர் | வருடம் 1 புள்ளி | 2 |
| சிரேஷ்ட மாணவர் தலைவர் / செயலாளர் | வருடம் 1 புள்ளி | 3 |
| ஏனைய உத்தியோகத்தர் பொருளாளர், உபதலைவர் பதவிகள் | வருடம் 1 புள்ளி | 2 |
| உதவி அரசஅதிபர் / கல்விப் பணிப்பாளராக அங்கீகரிக்கப்பட்ட சிரமதான செயற்திட்டம், சமூக அபிவிருத்தி திட்ட அமைப்பாளர், தலைமைப் பதவிகள் | - | 2 |
| றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர் | - | 3 |
| கடேற் சார்ஜன்ட் / சாரணர் குழு முதல்வர் | - | 2 |
| கடேற் கோப்ரல் / சாரணர் 'பற்றோல்' முதல்வர் | - | 1 |

நடுகல் நாட்டலும், எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளைய தினம் இரவு 7.05 மணிக்கு வடமராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தலைமையில் கரும்புலிகள் நினைவாலயத் திறப்பு விழாவும், நினைவு அடிக்கல் நாட்டலும் இடம்பெறும்.

அல்வாய் மேற்கு கட்டைப் புளியடி கொற்றாவத்தையில் காலை 10.00 மணிக்கு எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் நிகழ்வும் இடம்பெறும். கரும்புலிகள் நினைவாகப் பூங்

## 550 தமிழ்

450 பேரை ஏற்றிய கப்பல் ஒன்று சென்னையில் இருந்து திருமலைக்கும் 100 பேரை ஏற்றிய கப்பல் ஒன்று இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கும் வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 82,000 தமிழ் அகதிகள் இன்னமும் தமிழ் நாட்டில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய அதிகாரிகளது ஒத்துழைப்புடன் இவர்கள் நாடு திரும்ப உள்ளனர்.

## ஏற்புத்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

குளிரூட்டிகள் இல்லாது ஏற்புத் தடுப்பூசி மருந்தை வெறுமனே வைத்துப் பாவிப்பதில் எவ்வித பயனுமில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

காந்தருபன், கப்டன் சிதம்பரம், கப்டன் கொலின்ஸ், லெப். கேணல்போர்க், மேஜர் டாம்போ, கப்டன் ஜெயந்தன், ஆகியோரது உருவப்படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்படும்.

எழுச்சிக் கிராம அடிக்கல் பதித்தல் வைபவத்தில் வடமராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் திரு பா. பைந்தமிழன் ஈகைச்சுடரையும் வடமராட்சித் தளபதி திரு. அருணா நினைவுச் சுடரையும் ஏற்றிவைப்பார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் நினைவுப் பேருரைகள் இடம்பெறும் மற்றும் வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரினால் 'எழுமை புதுயுகம் என்னும்' நாட்டிய நாடகமும், அருணா இசைக் குழு நிகழ்ச்சியும் இடம்பெறும்

## மானிப்பாயில் பொதுக்கூட்டம்

வலிகாமம் பிரிவில் மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் மாலை 7.05 மணியளவில் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். இவ்வாறான பொதுக் கூட்டங்களிலும் அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(க), (யோ), (86).

## புறநிலை

டங்களில் ஈட்டிய சாதனைகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு, அந்தப் புள்ளிகளையும் கல்வித் தகைமை அடிப்படையுடன் சேர்த்துப் பல்கலைக் கழக அனுமதி தீர்மானிக்கப் படவுள்ளது.

தமையைத் தொடர்ந்தே மேற்படி உணவு முத்திரைகள் இரண்டாம் கட்டமாக விநியோகிக்கப்படவுள்ளன.

மேலும் மேற்படி உணவு முத்திரைகள் வருவதில் தாமதம் ஏற்படினும் அவற்றிற்கான கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட ப.நோ கூ.சங்கம் உரியகாலத்தில் மேற்கொள்ள யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகின்றது.

[பா], [நி]

## கோட்ட

இடம்பெயர்ந்த கல்விக் கோட்ட மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்ட யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் பாடத்திட்டங்களை முழுவதுமாக பூர்த்தி செய்யாத நிலையில் சில கோட்டங்கள் இருப்பதனாலேயே இவ்வாறு கோட்ட ரீதியாக பரீட்சை நடாத்த முடிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

பட்டது.

இவர்களில் 53 சதவீத மாணவர் சதாம்ஹுசைன் கொல்லப்படுவதை விரும்புகிறார்கள் எனவும், ஈராக் மீது அண்மையில் அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் சரியானதென 66 சதவீததத்தினர் வாக்களித்துள்ளனர் எனவும் தெரிவிக்க்ப்படுகிறது.

## தொடர்

### சொற்பொழிவு

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முதல் இடம்பெற்று வருகிறது. இவ் அலங்கார உற்சவத்தில் தமிழருவி திரு. த சிவகுமாரன் கம்பராமாயண தொடர் சொற்பொழிவை நடாத்தி வருகின்றார்,

இன்று மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை 'நிறை எனும் அங்குசம் நிமிர்ந்தது'' எனும் பொருள்பற்றி இவர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

இனிமேல் எந்தவொரு பதவியையும் தொண்டர்கள் என சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தும் சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒருதொகுதி ஆங்கிலமொழி ஆசிரியர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர் இவ் 4000 நியமனங்களில்ஒரு பகுதி தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழி போதிக்கும் ஆசிரியர்களாகவும் சிங்களமொழி பாடசாலைகளுக்கு தமிழ் மொழி போதிக்கும் ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

## வெட்டுப்புள்ளி

தொ த்ததும் அதில் சாதகமான தீர்ப்பு கிடைத்ததையடுத்து பொறியியல்பீட அனுமதிக்கு மீள வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இப்பொழுது ஏனைய பீட மாணவர்களுக்கு இவ்வாறான நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்கான ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.


ஈச்சமோட்டை கலட்டிப்புலம்

# அருள்மிகு ஸ்ரீஞானவைரவர்தேவஸ்தானம்

# வருடாந்த அலங்கார உற்சவகால

## இலக்கியப் பேருரை

பொருள் : கம்பராமாயணம்

நிகழ்த்துபவர் : தமிழருவி திரு. த. சிவகுமாரன்

(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

காலம் : 03-07-93 சனி முதல் 15-07-93 வியாழன் வரை

நேரம் : முதல்இரண்டு நாட்களும் 5 30 - 6-30

ஏனைய நாட்களில் 6.00 - 7.00

| நாளும் | பொருளும் | நாளும் | பொருளும் |
|---|---|---|---|
| 3-7-93 | 'அவர் தலைவர் அன்னவர்க்கே சரண்' | 10 07-93 | 'நீயேஉலகுக்கு ஒரு சாட்சி' |
| 4-7-93 | 'நிறை எனும் அங்குசம் நிமிர்ந்தது' | 11-07-93 | 'நின்னொடும்எழுவரானோம்' |
| 5-7-93 | 'அரக்கர் பாவமும் அல்லவர் அறமும்' | 12-07-93 | 'இன்று போய் நாளைவா' |
| 6-7-93 | 'தோழமை என்றவர் சொல்லிய சொல்' | 13-07-93 | 'கும்பிட்டு வாழ்கிலேன்' |
| 7-7-93 | 'வஞ்சமகள் வந்தாள்' | 14 07-93 | 'உண்ணாதே உயிர் உண்ணும் ஒருநஞ்சு' |
| 8-7-93 | 'யார்கொல் இச்சொல்லின் செல்வன்?' | 15-07-93 | 'நாளை நீ மவுலி சூடும் நன்னாள்' |
| 9-7-93 | 'சிறியன சிந்தியாதான்' | | |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

—நிர்வாக சபையினர்.

அன்பளிப்பு : குமார் பாணகம் பாஷையூர், யாழ்ப்பாணம்.

(சி-6956)


| | | |
|---|---|---|
| பாடசாலை 1ஆவது அணி உறுப்பினர் | வருடம் 1 புள்ளி | 2 |
| சிரேஷ்ட மாணவர் தலைவர் / செயலாளர் | வருடம் 1 புள்ளி | 3 |
| ஏனைய உத்தியோகத்தர் பொருளாளர், உபதலைவர் பதவிகள் | வருடம் 1 புள்ளி | 2 |
| உதவி அரசஅதிபர் / கல்விப் பணிப்பாளராக அங்கீகரிக்கப்பட்ட சிரமதான செயற்திட்டம், சமூக அபிவிருத்திட்ட அமைப்பாளர், தலைமைப் பதவிகள் | - | 2 |
| றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர் | - | 3 |
| கடேற் சார்ஜன்ட் / சாரணர் குழு முதல்வர் | - | 2 |
| கடேற் கோப்ரல் / சாரணர் 'பற்றோல்' முதல்வர் | - | 1 |
| சபையினால் பல்கலைக் கழகம் மானியங்கள் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும்ஏனைய தகைமைகள் (உதாரணம்) எழுத்து ஆக்கங்கள் புதிதளித்தல், க. பொ. த. (உயர்தரம்) இலக்கியவிருதுகள் மற்றும் விஞ்ஞானம், சமூக அபிவிருத்தி விசேஷ விருதுகள் | - | 2 |
| மொழித்திறன் க. பொ. த. (சாதாரணம்) அல்லது, அதற்குச் சமமான (சிங்கள மற்றும் தமிழ்) திறன் | - | 2 |
| க. பொ. த. (சாதாரணம்) அல்லது அதற்குச் சமனான சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலத் திறன் | - | 3 |

### விளையாட்டு மற்றும் துறைகளில் வெளிமட்டத்திலான சாதனைகள்

**சர்வதேசமட்டம்:**

விசேஷ தெரிவுக்கு முந்திய 4 வருடங்களில் சம்பந்தப்பட்ட விளையாட்டுத்துறைக்கு தேசிய கட்டுப்பாட்டுச் சபையினால் தெரிவுசெய்யப்பட்டிருந்தால்-

| | | |
|---|---|---|
| பொற்பதக்கம்—1ஆம் இடம், வெள்ளி பதக்கம் —2ஆம் இடம், வெண்கலம் பதக்கம் —3ஆம் இடம் | — | 16 புள்ளிகள் |
| பங்குபற்றியவர்களுக்கு | — | 8 புள்ளிகள் |
| **தேசிய மட்டம்** | | |
| 1, 2, 3 ஆம் இடங்களுக்கு | — | 12 புள்ளிகள் |
| **மாகாண மட்டம்** | | |
| 1, 2, 3 ஆம் இடங்களுக்கு | — | 6 புள்ளிகள் |
| **மாவட்ட மட்டம்** | | |
| 1, 2, 3 ஆம் இடங்களுக்கு | — | 4 புள்ளிகள் |

**வேறுசாதனைகள:**

| | | |
|---|---|---|
| சாரணீயம், பெண்கள் சாரணீயம் ஜனாதிபதி சாரணர் | — | 12 புள்ளிகள் |

**மற்றச் சாதனைகள்: (நுண்கலை ஆகியன)**

| | | |
|---|---|---|
| **சர்வதேசமட்டம்** | | |
| 1, 2, 3 ஆம் இடங்களுக்கு | — | 16 புள்ளிகள் |
| பங்குபற்றியிருந்தால் | — | 8 புள்ளிகள் |
| **தேசிய மட்டம்** | | |
| 1, 2, 3 ஆம் இடங்களுக்கு | — | 12 புள்ளிகள் |
| தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட துணிகரமான செயல்கள் | — | 12 புள்ளிகள் |

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 03-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10202

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-8432, 28-6546, 42-2157, 26-7663, 24-0576
26-5493, 24-5721, 24-4875, 24-5258, 27-9489
26-0535, 28-3004, 26-5576, 27-7717, 26-3582
26-4501, 41-5417, 22-6468, 27-9649, 26-2366
26-3412, 26-9797, 27-7043, 27-7653, 24-5703
28-5862, 43-4580.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8823, 41-8686, 28-2345, 26-3605, 24-8710
24-4560, 24-7628, 28-2156, 43-4045, 22-4895
28-2956, 26-6842, 26-6309, 43-1062, 24-7225
24-6972, 27-4024.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.